கதையைக் கேளடா தமிழா!

காளிதாஸன்

O- ,1NKD, K
N52
182021

கதையைக் கேளடா - தமிழா!

"காளிதாஸன்"

ஜனநாயக ஆராய்ச்சிக்கழக வெளியீடு

64/U லஸ் சர்ச் ரோட் :: சென்னை-4.

முதற்பதிப்பு: டிசம்பர், 1952

விலை 5 அணா

ஸ்ரீ சரஸ்வதி விலாசம் பிரஸ், சென்னை-2.

ஜனநாயக ஆராய்ச்சிக் கழக சென்னை ஸ்தாபனத்தின் முதல் வெளியீடு இது. இந்தக் கம்யூனிகளைப் பற்றி ஒரு கவிதை வெளியிட வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். கவி "காளிதாஸனை" எழுதச்சொல்லிக் கேட்டபோது அவர் உற்சாகத்துடன் ஒப்புக்கொண்டார். நானூறு வரிகள் எழுதுகிற திட்டம் நாற்பத்தி எட்டு பக்கங்களாக வளர்ந்தது. நாட்டு வளத்தையும், பழங் கதையையும், காந்தி வருகையையும் சேர்த்துக் காளிதாஸன் ஒரு காவியத்தையே செய்து தந்து விட்டார். தொடர்ந்து இன்றுள்ள நிலைமைபற்றி இத்துடன் சேர்த்துப் பாடவும் இசைந்துள்ளார்.

"நாட்டு மக்கள் நலமுற்று வாழ" என்று அன்று பாரதி பாடியதுபோல இன்று காளிதாஸன் எழுதித்தந்துள்ள **கதையைக் கேளடா - தமிழா!** என்கிற இந்தக் காவியத்தைத் தமிழர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம் — படித்து ஆனந்திக்க மட்டுமல்ல — பாடி ஆனந்திக்க மட்டுமல்ல — அதிலுள்ள கருத்துக்களை மனதில் கொள்ளவும்தான்.

சென்னை,
30—11—52.

க. நா. சுப்ரமண்யம்

பல்லவி

கதையைக் கேளடா — தமிழா!
கதையைக் கேளடா

அநுபல்லவி

துதிமிகுந்த ராமன் புத்தன் தூய்மைக் காளிதாஸன் கம்பன்
மதி நிறைந்த சங்கரன் குரு வள்ளுவன் பிறந்த நாட்டின்
(கதை...)

சரணங்கள்

கவின் மிகுந்த நல்லநாடு கருணைகொண்ட ஞான நாடு
புவியிலே யுயர்ந்த நாடு பொன்விளைந்த செல்வநாடு
கவினிழந்து போன சேதி காந்தியார் பிறந்த சேதி
புவியுயர்ந்த சுதந்திரத்தின் புதுமைகொண்டு வாழும் சேதிக்
(கதை...)

காந்தி மஹான் பெற்றுத்தந்த கண்மணியாம் சுதந்திரத்தை
கலக்கவேனப் பற்பலவாய்க் கடுமை செய்யும் கட்சிகளில்
பாந்தமற்ற ருசியா வின் படையான கம்முனிப்
படுபாவி செயும் தொல்லைப் பகட்டான தகிடுதத்தக்
(கதை...)

கதையைக் கேளடா - தமிழா!

நாட்டு வளம்

பொன் விளைந்ததோர் பூமி இந்தியா புகழ் விளைந்த பூமி
கன்மம் நீங்கக் கடவுளி னுண்மைக் காட்சி கண்ட பூமி
ஆனைமுகத்தவ னாறுமுகத்தவ னடிவணங்கும் பூமி
ஆனைவனத்தகி லாண்டநாயகியி னருள்நிறைந்த பூமி
காலனையுதைத்த காலகண்டனின் கால்வணங்கும் பூமி
நீல நிறத்தவன் மாலவதாரங்கள் நேர்ந்ததிந்த பூமி
மலைமகளும் பாலலைமகளும் வெண் கலைமகளும் வந்தே
நிலைபெறு நீர்வளம் நிலவளம் கலைவளம் நிறையவைத்த பூமி
சிந்தைக் கெட்டாச் சிவனைச் சிலையில் சேகரித்த பூமி
விந்தைக் கோபுரம் கோயில்கள் சூழ்ந்த விண்ணகராம் பூமி
உலகிலு யர்ந்த இமயப்பனிமுடி யோங்கிநிற்கும் பூமி
நிலமகள் முகமுறு திலகமெனக்கனி நிலையமான பூமி
விந்தியமாமலை மேகலையாரம் மேலைமலைச் செங்கோல்
சிந்து கங்கைமுத் தாரமணிந்த தேவிளங்கள் பூமி
காவிரிபெண்ணை பாலாறுக்ருஷ்ணைகோ தாவரிநர்மதையே
தாவியநதிபல பூவிரிபொழில்வயல் தழுவிநிற்கும்பூமி
முப்புரமுங்கடல் மோதிக்குமரியின் முனைவணங்கும்பூமி
அப்புர மிப்புரமெப்புரமக்களும் ஆசைகொண்டபூமி
மலையும்குன்றும் வனமும் வயலும் மணலும் ஆறுகள் பாயும்
இலைபூ காய்கனி ஏந்தியழைக்கும் எங்களின் ஜன்மபூமி
பண்டை நாடுகள் யாவினுமிக்கப் பழைமையானநாடு
தொண்டறியாத சுதந்திர வாழ்வின் தூய்மை கண்டநாடு
காட்டு மிராண்டிக ளாயுலகத்தவர் கதிகலங்கும்போதே
நாட்டினி லெங்கணும் நாகரிகக் கொ[illegible] நாட்டியதிந்நாடு
பச்சையூனுணும் பப்பரராகப் பாரகம் வாழ்ந்திடவே
சொச்சமானசோ றுக்கும் விதையின் குட்சிகண்டநாடு
மலைக்குகையிலே மரச்செறிவிலே மாந்தர் வாழ்ந்தகாலம்
மனைவகுத்ததில் குடியிருப்பதோர் மாட்சிகண்டநாடு
ஆடையற்றவ ராக மற்றவ ரலையுமந்நாளில்
சோடையற்றதோர் பஞ்சுபட்டினால் துணிகள் நெய்தநாடு

காட்டுவிலங்குகள் போலமக்களும் காமங்கண்டகாலம்
பாட்டிலுயர்ந்த தெய்வக் காதலின் பண்புகண்டநாடு
ஆதி நூ லெனும் வேத நூ லினால் ஆண்மைசெய்தநாடு
நீதி நூல்பல ஓதி வாழ்வினை நேர்மைசெய்தநாடு
உபநிடதமென்னும் உண்மையால் ஞானத் துயர்வுகண்டநாடு
கபடு சூதிலாமுனிவர் வாழ்க்கையின் கருணை பாய்ந்தநாடு
மனுமந்தாதா யெனுமுதலாழி மன்னர்வாழ்ந்தநாடு
இனிதாம் தமிழ்மூ வேந்தராட்சியின் இன்பங்கண்டநாடு
ராமனெனப்பரந் தாமனேவந்து ராஜ்யமாண்டநாடு
வீமனொடுவில் விஜயனுந்திறல் வீரங்காட்டும்நாடு
கண்ணன் கார்முகில் வண்ணன் கோவியர் கலைகளைந்தநாடு
திண்ணமாகிய கீதையுரைத்தே செம்மைசெய்தநாடு
மந்திர நான்மறை மாமுனிவோர்கள் வாழ்ந்திருந்தநாடு
அந்தரவானத் தவரும் பிறக்க ஆசைகொண்டநாடு
கற்பனைக் கெட்டாக் கடவுளர்தாழக் காலனையும் வெல்லும்
கற்புநிறைந்த பொற்புமிகுந்த கன்னியர் வாழ்நாடு
சந்திரகுலமும் சூரியகுலமும் தான்வளர்த்தநாடு
செந்தமிழும்வட மொழியுங்கவிதைகள் சேர்த்துவைத்தநாடு
புத்தரன்பெனும் போதங்கண்டதோர் புண்ணியநந்நாடு
சித்தருமுத்தரும் பக்தரும் வாழ்ந்தே சீர்செய் ததிந்நாடு
வான்மீகன் தரு கவிதைக்கதையால் வளமிகுந்தநாடு
வான்மறைகண்ட வ்யாஸன்வகுத்த மாபாரதநாடு
ஆளும் மன்னர்கள் நாளும் கவிகளை ஆதரித்தநாடு
காளிதாசன் சா குந்தல நாடகக் காட்சிகண்டநாடு
ஔவைப்பாட்டியி னருந்தமிழாலே அறிவு கொண்டநாடு
செவ்விய வள்ளுவன் குறளாலுலகைச் செம்மைசெய்தநாடு
திருவாசகம்திரு நான்மறைமூலன் திருமந்திரம் ஆழ்வார்
திருவாய்மொழித்திருப் புகழ்தேவாரத் தேசுமிகும்நாடு
கம்பன் கவிதைக் கடவுளியற்றிய காவியநந்நாடு
அம்பொன்சிலப்பதி காரக்கவிதை யார்ந்ததுமிந்நாடு
அம்பத்தாறு தேசத்தரசர்கள் ஆண்டிருந்ததேசம்
உம்பர்போற்றும் சக்கரவர்த்திக ளுயர்ந்திருந்ததேசம்

மலை வளம்

வண்டுபாடிய வனமலர் வாச மந்த மாருதம்வீசும்
கொண்டல்பேரிகை கொட்டிமக்களின் குறைகள் நீங்கவேபேசும்
குண்டுங்குழியும் கிண்டுகிழங்கு குங்குமமேலம் கோட்டம்

தண்டேன் சந்தச் சிந்தூரம் யானைத் தந்தம் மான்கலைபபாட்டம்
கற்பூரம் கஸ்தூரி கடுவெருகு கரடி வெம்புலிப்பிச்சு
கற்பமூலிகாட் டெருமைக் கொம்பு கானச்சேவலினிறகு
கல்மதம் மான்மதம் கரிமதம் புலிநகம் கவண்கடுவலையின் கண்ணி
பல்விதமாகிய மலைபடு செல்வம் பரவிய தெங்கள் தேசம்
பம்பை யடித்து வெம்புலிமேலே பம்பியே பாய்ந்திடுவாரே
கொம்பினையூதி யானையைக் கொம்பு கொண்டு சுழற்றிடுவாரே
வெம்பிய வேங்கையை வீட்டில் குழந்தை விளையாடக்கொடுப்பாரே
கம்புநுனியிலே கருங்குரங்கொடு கரடியைக் கூத்திடுவாரே
பாம்பு பிடிப்பார் மயிலோடதனைப் பழக வைத்திடுவாரே
கூம்பு சுழற்றிக் கொற்றவைமுருகன் கோயிலிற்கும் பிடுவாரே
தாம்பினைவீசி வான்மரந்தன்னைத் தரையிற் சாய்த்திடுவாரே
தீம்புசெய் யெதிரிகள் எத்தனையாயினும் செந்தலை திருகிடுவாரே
காலிலே கழல் கண்ணிலேதழல் கையிலே கணைசீறும்
மாலுறும்படி மேல்வளர்ந்ததோள் மாமலைக்களைத் தூறும
வெறுகிழல்கண்டே விண்பருந்தின்மேல் விட்டதோர் கணை
தப்பாது
உறுமுதல் கேட்டே மாயவிலங்கின்மே லோட்டிய யீட்டிதப்பாது
மரமரமாகத் தாவுவர் மேக மழைகுலுக்கவே பாய்வார்
குரவணிகுஞ்சிச் சிறகணிவாரெம் குன்றக்குறவர்கள் தேசம்
கருகுமணிப்பிச் சோலைகருவளை கான்புலிப்பல் நகத்தாலி
சொருகுகொண்டையில் மயிலின் தோகை செரக்கிநடிக்கும் கூந்தல்
மூங்கிலில் வாங்கிய பூந்துகில் நாரின் மோஹனமாகியபட்டு
கோங்கணையும் கஸ்தூரி மெழுகுசுடர்க் கோலக்குங்குமப்பொட்டு
கருங் குவளையிற் செந்தாமரைகள் கனவுகண்டிடும் கண்கள்
கரும்புகனிந்த பவளக்கனியில் அரும்பிய முல்லைச் செவ்வாய்
துன்றிய மூங்கிற் துணரென ஓங்கித் தூக்கிய தோளுடையார்
குன்றுகுனிந்திட நின்று நிமிர்ந்திடும் கொங்கையிணைப்புடையார்
கும்பதனத்தடி வாரஞ்சரிந்த கோலமின் போலிடையார்
தும்பிக்கையெனும் துடையார்மத்தகம் தோற்கும்பரடுடையார்
செங்கரம் வீசியமந்திரக் கோலார் செம்பஞ்சூட்டிய காலார்
அங்கமெலாமெழில் பொங்கிடயின்னிசை யமுது வழங்கியவாயார்
கட்டுக்கலையாத் திட்டம் குலையாக் காரிரும்புருகுமேனி
எட்டுத்திக்கிருள் மட்டியவெண்ணெய் யிறுகிக்கனிந்தவடிவம்
கல்லையுடைத்திடும் காருருக் கன்னியர் கச்சையிற்சுரிகையினர்
புல்லை மந்திரித் தேயதைவாளாப் பொங்கிடச் செய்திடுவார்
காதலித் தொருவனைக் கைப்பிடிப்பாரவன் கூதலில் வாழ்ந்திடுவார்

ஆதரிக்கமுதுகு மதலைகள் பெற்றவர்க் கழகோடாண்மையளிப்பார்
இந்திரஜால மஹேந்திரஜாலம் எல்லாம் கைவசமாமே
அந்தரவானத் தவரையுமடிமைக ளாக்கொளுதிண்ணிய நெஞ்சார்
கைக்குறி காண்பர் மெய்க்குறிகாண்பார் ககனக்கோட்குறிகாண்பார்
சிக்கெனமுக்கா லத்துளசேதியை யிக்கணம் ஜோதிடம் சொல்வார்
வேங்கைப்புலிமேல் வருவார்கொடிய வெவ்வரவினைமுத்திடுவார்
ஓங்கிய செந்தீ நடுவே சுனைநீ ரோடையெனப் பாய்ந்திடுவார்
கிள்ளையைக் குயிலின் பிள்ளையைப்பிடிப்பார் துள்ளிதுள்ளிநடிப்பார்
தெள்ளிய தேனையெடுப்பார் சாமை தெளிப்பார் தினையை யறுப்பார்
வரகுச்சோறுவடிப்பாரிறைச்சி வகை வகையாகத்தொடுப்பார்
இருகுங்கிழங்கு காய்கனி மதுரத் தேக்கடைச் சமயல்முடிப்பார்
சோலையிலே பரண்மேலையிலே சுனைத்தோயலிலே மலர்ப்பாயல்
சாலையிலேகுகை மூலையிலே காதற் தழைவினிலே தழுவிடுவார்
கண்விழிப்பிலே புன்னகைப்பிலே கைக்நொடிப்பிலே நெஞ்ச
வண்மை வைப்பிலே வனமிருகங்கள் வால்குழைத்துவர வருவார்
தேட்டினிலே கூற்பாட்டினிலே விழிக்கோட்டினிலே நகைஇட்டி
நாட்டினிலெங்கணும் போட்டியிடக்குறி காட்டிய விடுதலைமாதர்
கற்பு நிறைந்தவர் காமமிகுந்தவர் காலனுமஞ்சுந் திறலார்
அற்புதமாகிய விரக்கன்னிய ரான குறத்திகள் தேசம்

கான் வளம்

வேங்கைகோங்ககில் மூங்கில் பூங்கழை தாங்குநுணைகருங்காலி
தேங்கும் திம்பலா ஓங்கும் தேவதரு தேக்குவன்னிசுடர்மின்னி
சட்டியிருளி யிருவாட்சி சண்பகம் தீட்டும் பிச்சியிலை நொச்சி
நீட்டசோகம் சரக்கொன்னை புன்னையெனக் காட்டின் சிருயரும்தேசம்
மேட்டாங்காடுகள் மேய்ச்சற்காடுகள் தோட்டந்துறவுகளெங்கும்
காட்டாந்தரைகள் கள்ளிகள் முள்ளிகள் கல்லும் களரும்தங்கும்
ஆடுசெம்மறி பன்றிஎருதெருமை நீடும் கன்று பசுத்தெய்வம்
கூடும்பால் தயிர் வெண்ணெய்நெய்யமுது கொழுமையானதோர்
தேசம்

வேலிக்கட்டுகள் தொண்டுப்பட்டிகள் தண்ணீர்த்தொட்டிகள்சூழும்
தோலிற்பறிகள் தோட்டக்கிணறுகள் தூணுறு ராட்டினத்தூக்கு
கம்பங்காடுகள் சோளக்கொல்லைகள் காராமணி கேழ்வரகு
பம்பிவெடிக்கும் பருத்திக்காடுகள் பயறுகள் விளையும்தேசம்
மல்லிகைமுல்லைப் புல்லணை மென்பூ மருவுதவனம் சாமந்தி
துல்லிய தும்பை யெருக்கம் பஞ்சி தூமணமலர்களனேகம்
மாங்கனி கொய்யாத் தீங்கனியத்தி மாதுளங்கனி எலுமிச்சை

தேங்கனி துங்கு நாவலிலந்தை தேமதுரக்கனி பலவாம்
சிணுங்கிமினுங்கியணுங்கிணுங்கி திகைப்பூடலரிவிலரி
அளிஞ்சி கொளிஞ்சி நெருஞ்சிவிரிஞ்சி ஐவிரலீநாயுருவி
பூசனிபுடலை பரங்கிமுருங்கை பொன்னாங்கணிப்புளிக்கீரை
மூசுறு வெண்டை வெள்ளரி கத்தரி முதுபாகற்சுரையாரை
அவரை துவரை மொச்சைபச்சை ஆமணக்குவேர்க்கடலை
தகரை தட்டை எள்ளுகொள்ளு சாரையிலுப்பையுழுந்து
மயில் நடமாடும் குயிலிசைபாடும் மரங்கொத்திவிளையாடும்
துயிலுறுமாந்தை தொங்கூஞ்சல்மனைத் தூக்கணங்குருவிகளாடும்
வானம்பாடிகள் தேனிசைபாடும் வண்டுகளின்னிசைகூடும்
தேனின் சிட்டுகள் பாயும்கோழிச் சேவல் கதிர்வரக்கூவும்
சின்னச் சின்னச் சிட்டுக்குருவிகள் சிறகலர்த்திமெய்கோதும்
வன்னப் பறவைகள் பற்பலவண்ணம் வாய்ந்தவளம்பெறும்தேசம்
புஞ்சைப் பூமியில் நஞ்சைவிளைக்கும் புண்ணிய ஏரிகள்பலவே
கொஞ்சிய சுண்ண மண்கல்மனைகள் கோத்திடும் பனைமடற்கூரை
கோலசைத்துமே குழலிசைத்துமே கோக்கள் மேய்ப்பவர் சிலரே
வால்முறுக்கியே விரையிறுக்கியே வண்டியோட்டுவார் சிலரே
பொட்டி வண்டிகள் ரெட்டைமாடுகள் பூட்டும் வண்டிகள் பாரம்
கட்டும் வண்டிகள் பந்தயத்துக்காம் தட்டுவண்டிகள் விடுவார்
தோள்புடைத்திடும் இடைசிறுத்திடும் துடைதடித்திடும் விறலார்
தாள் புடைத்திடத் தறுகணேற்றினைச் சுழலவைத்திடும் திறலார்
கிறுக்கிய செருப்பு இறுக்கியவேட்டி முறுக்கியமீசைக்கிருதா
வெறுக்கொளும் பார்வை விறுக்குகை வீச்சு திறுக்கிய
தலைமுண்டாசு
திண்ணெனும்மேனி துண்ணெனும் நெஞ்சம் பண்களியாடி
மகிழ்ந்தே
கண்ணன்கழலிணை யெண்ணுமிடைக்குலக் கானவர்வாழும்தேசம்
சீவிவாசனை நீவிச்சொருகிய சிங்காரக் கொண்டையிலே
தூவியமுல்லை சிரிக்கும் மல்லியின் கோவைவெடித்துவிழிக்கும்
வண்ணப்பாற்குளம் தன்னிலே நீந்திய வண்டுக்கருவிழிக்கண்கள்
கண்ணொளியாலேநெளியுங் கண்ணாடிக் கனிபோல் தழைந்தகன்னம்
புத்தம் புதுமின் குமிழம்பூவைப் பூத்துச் சிலிர்க்கும் மூக்கு
முத்தினிற் தம்பலம் பூசிய மாதுளை வித்தெனப்பல்லின்வரிசை
கொவ்வைக்கனியின் வாய்பிளந்ததெனக் குங்குமப்பூவரிச்செவ்வாய்
கவ்வுமிசைக்குயில் குடிபுகுந்ததெனக் கமுகங்குழலிற்கண்டம்
வட்டமிட்டேயண் ணாந்து கச்செனும் பட்டைக்கீறவே விம்பும்
கொட்டமிட்டிழை நூல்புகாதபடி கட்டிய கொங்கைததும்பும்

தெட்டுறுங்கதலித் துண்டினில் வைரச் சேகுறும் துடைகளின் மேலே
வட்டகன்று வடிவாகும் பரடின் மொட்டுயர்ந்து விரிவாகும்
வழுவழுக்கிய தண்டையிலே சினை வரால் வழுக்கியகணைக்கால்
தழைதழைக்குங்கிங் கிணிசதங்கைகள் தழுவிய தளிர்மலர்ப்பாதம்
பால்கறந்துதேன் பாகுடன்பனம் பாகுவெல்லமுங்காய்ச்சுவார்
மால்கனிந்துகுழ லூதியே மண வாளன்மேலன்புபாய்ச்சுவர்
காலையெழுந்து பசுவலம் வந்து கண்ணனைக் கும்பிடுவாரே
சோலைக்கிளியென மஞ்சள் குளித்துச் சொக்கியசுடர்விடுவாரே
தொழுவத்தினிலே கன்றுகாலிகளைக் கழுவிப் பூசனைசெய்வார்
தழுவித்தழுவி ரகஸியமெல்லாம் சாற்றிக்கொஞ்சிடுவாரே
மத்துறு கயிறுல் தத்துறுதயிரை வாங்கிவாங்கிக் கடைவாரே
முத்தியவெண்ணெய்ப் புத்துருக்கு நெய் மோகனஞ் செய்திடுவாரே
தண்ணீர்க்குடத்தைத் தலையினில் வைத்துத் தாவிநடந்திடுவாரே
வண்ணப் பூக்களைக் கோத்துமாலையாய் மார்பிலணிந்திடுவாரே
பஞ்சுப் பொதியினை நூற்பார்வேலிப் படலைப்படலொடு கோப்பார்
புஞ்சைக் கொல்லையைக் காப்பார் வைக்கோற் போர்மலையாகப் பார்ப்பார்
அன்புறுகணவர்க ளின்புறுமதலைக ளருளுறு நெஞ்சக்கனிவு
துன்பறியாதவர் வன்புரையாதவர் தூய வாழ்வுறும்துணிவு
மழமழக்கு மாங்கனியின்மாநிற வண்ணம் திண்ணியமேனி
கொழுகொழுத்தெழில் செழிசெழித்திடும் கோலக்கோவியர்தேசம்

வயல் வளம்

கார்வளம் பொங்கும் நீர்வளம் பொங்கும் கழனிகளெங்கணுமெங்கும்
ஏர்வளம்கொண்டே பார்வளம் செய்யும் சீர்வளம் தங்கும்தங்கும்
மீனெனவீழும் வெண்பனியுருகும் விண்ணாறுகள்பாயும்
வானுறுமேகம் கீறியமின்னல் வானாறுகள் பாயும்
தேனின்கூடுகள் பெருகியுடைந்த தேனாறுகள்பாயும்
கானின்வாசத் தோடுகலந்த கானாறுகள் பாயும்
தீம்பலவின்கனி மோதிக்கிழிந்த தேக்காறுகள்பாயும்
பூம்புனையுந்தேன் பொங்கி வழிந்த புத்தாறுகள் பாயும்
சிறியோர்பகல் மீறிவடிந்திடும் சிற்றாறுகள்பாயும்
சேறுகுழைத்துக் குட்டைகளாகத் தேங்காறுகள் பாயும்
மட்டணையிட்டநீர்க் கொட்டமடித்த வாய்க்கால்கள் பாயும்
கட்டியமதகின் கதவினை முட்டும் கால்வாய்கள் பாயும்

ஆலையிலூறிய கருப்பஞ்சாறுக ளாறுகளாய்ப்பாயும்
சோலையிலீச்சம் பாளையின் மதுரச் சொக்காறுகள் பாயும்
தென்னம்பாளையைக் கீறியசெந்தேன் தெளிவிளநீர்பாயும்
புன்னந்தாதினிற் பொன்பொடிதூவிப் புரளாறுகள் பாயும்
கந்தகளபகஸ் தூரிகுளித்த களராறுகள்பாயும்
சிந்துரச் செவ்வாய்த் தம்பலந்தேங்கும் சிவப்பாறுகள் பாயும்
ஆறுகள் பாயும் தூறுகள் மாயும் சேறினிற் செந்நெல்சாயும்
ஏறுகள் பாயும் எருமைகள் தோயும் ஏரிகுளம்சுனைமேயும்
அழகுகுடி யிருக் குங்கரையோரத் தலைகள்நுரை சிரிக்கும்
பழகிய புல்லணை வடிகால் மணலின் பாயல் திரிதிரிக்கும்
கீரிமுதுகெனக் கிறுக்கியணிலெனக் கீற்றுக்கருமணலும்
தாருறுவாழைச் சருகெனவிரவித் தழுவிய செம்மணலும்
பாசிக்கொத்துகள் கிளிஞ்சல்முத்துகள் பைம்பொன்பொடிநறலை
வீசியசின்னச் சங்குச் சுரிகைகள் விழைகூழாங்கற்கள்
நீரிலுறங்கும் சங்கம்நீரின் நெளிவிலுறங்கும் மீன்கள்
தூரிலுறங்கும் ஆமையின்முதுகுத் தோட்டிலுறங்கும் நண்டு
காவிலுறங்கும் வண்டுகள் கமலப் பூவிலுறங்கிடு மன்னம்
நீவிய மண்ணில் நீர்க்குடமேந்தும் நிறைவிலுறங்கும் நத்தை
தண்டலை மயில்நட மாடுங்குவளைத் தண்மலர்க்கண்ணைவிழிக்கும்
தெண்டிரை தாளங்கொட்டுமுலாவிய தென்னலிலே சுதிசேரும்
சில்லுவண்டுகள் பாயும் சின்னச் செந்தேன்சிட்டுகள் தோயும்
நுல்லிய நூல்வலை பின்னுஞ்சிலந்தி நுண்பனிவலையதில் மின்னும்
கொக்கொருகாலில் நின்றிடமீனைக் கொத்திகள் வானிற்தத்தும்
புக்கொருநாரை சிலிர்க்கும் நாணற் புல்லைத்தவளை குலுக்கும்
தட்டாரப்புள் தாவும் கமலத் தட்டிலை நீர்முத்தேந்தும்
வட்டாரச்சுழல் வண்ணாத்திப்புள் மலரிதழ்மேலிளைப்பாறும்
வானம்பாடிகள் பாடும் நாகண வாய்ப்புள்ளதைக் கொண்டாடும்
கானக்குயிலிசை கூடும் காகம் கரையும் கிளிகள் பேசும்
கரிச்சாங் குஞ்சுகள் கூவும்சிறகை விரிச்சாலாத்திகள்மேவும்
சொரிச்சாந் தூங்கும்செம்பூத்துத்தலை நெரிச்சேபூத்தெனக்கேவும்
ஓந்திதன்னிறம் மாறும் ஓணான் உகளும்தலை தடுமாறும்
கேந்திபிடித்தொரு பொந்தினிலாந்தைப் பேந்தப்பேந்த' விழிக்கும்
தேரைகிடக்கும் பாம்பு சறுக்கும் திகைத்திடுங் கொல்லாகொல்லா
பாரினில் வந்த தாரகையென்னப் பச்சொளி மின்மினிமொச்சும்
தும்பி பறக்கும் தலைகீழாகத் தொங்கிய வௌவால் தூங்கும்
சிம்புள் சிரிக்கும் கொம்பினிற்பாக்குச் செத்தியிலைகளைத்தைக்கும்
மசக்கைதட்டிய பட்டுப்புழுவது முசுட்டையினிலையைக் கவ்வும்

விசுக்கெனத்தாவும் வெட்டுக்கிளிகள்பொசுக்கெனப்புல்லைத்தவ்வும்
செந்தீப்பொறிகள் பாலமிட்டதெனச் செவ்வெறும்புகள்போகும்
கந்துங்கரிமணி கால்கொண்டதெனக் கட்டெறும்புகள்போகும்
புழுகிழுநெளியும் பூச்சிகளொளியும் புனிலிடையூசிகள் சுத்தும்
கொழுகொழுகொம்பின்கூட்டிற்குஞ்சுகள் கொஞ்சிக்குலாவும்தேசம்
வாழைமடல் கதிரொளியை வடிக்கும் தாழைகள்வா ளேந்தும்
கூழையிற காளான் குடையை எடுக்கும் குருக்கத்திக்கொடிபூக்கும்
பசுமைகுடியிருக்கும் பண்ணைகளில் பைம்பொன் கதிர் தூக்கும்
குளுமைகுடியிருக்குந் தருநிழலிற் கோலமலர்குலுக்கும்
கொழுமைகுடியிருக்கும் விளைவெல்லாங் கோலங்குடியிருக்கும்
செழுமை குடியிருக்குங் கரையெல்லாஞ் செல்வங்குடியிருக்கும்
புள்ளின்னொலியும் புனலின்னொலியும் பொங்காலைச்சாரொலியும்
மள்ளரினிசையும் பள்ளிகள்வளையும் துள்ளொலி பலபலப்பும்
வரப்பொருமுழமே நீளும்தோயும் வண்டலோர் முழமேதாழும்
கரப்பொருபனைபோ லோங்கும தன்வாய்க் காலாளாழம்போகும்
மதகொருமலைபோல் நிற்கும தன்வாய் மடையொருகணவாயாகும்
குதிகுதிவெள்ளக் கொள்ளைகள் குமுறிக் கொந்தளித்தருவியாகும்
கண்ணிகண்ணியாய்க் களருறு மணலின் கரைகள் பிறியே பாயும்
பண்ணைபண்ணையாய் வண்டல்வடித்துப் பாயலாகியேதாயும்
ஏர்ச்சாலுழுதா லேல்லாதென்றே தேர்ச்சாலுழுதிடுவாரே
நீச்சாம் நீரைத் தோய்ச் சுச்சேறாய் நிண்ணயம் செய்திடுவாரே
கதிரொருமுழமே நீளும்கதிரின் கட்டுமுக்கலமே காணும்
அதிசயம் அறுதா ளறுக்கமறுதா ளப்போதே பயிராகும்
எப்போதும் வருடத்துக்கொருமுறை முப்போகந்தரும்பூமி
கொப்பாமெருவைத் தப்பாதுண்டு செழிப்பாகியதோர் தேசம்
சிதறிப்போன நெல்லை யெடுத்தால் சேனைக்குணவாக்கிடலாம்
குதறிப்போன நெல்லாற்கடலைக் குழப்பிக் கூழாக்கிடலாம்
மாடுகட்டிப்போ ரடிச்சாற் செந்நெல் மாளாதென்றேயானை
ஜோடுகட்டிப் போரடிக்குஞ்செல்வம் தூக்கிய தெங்கள்தேசம்
புதியதோர் வைக்கோற் போர்மலைமேகம் புணரும் பொன்மலையாகும்
குதிரவை போதாதெனவே நெல்லின்கோட்டைகள் கட்டிடுவாரே
படியா லளந்தாலாகாதென்றே பாரம் நிறுத்திடுவாரே
பிடியால் பிச்சை யிடாரே வள்ளப் படியால் கொட்டிடுவாரே
உரலொருகோடி யுலக்கைகள்கோடி ஒண்டொடியார் பலகோடி
விரவிய முறம்பல கோடிகள்தீட்டும் விதம்பலகோடிகளாமே
செருக்கும் கொண்டையின் சொருக்கும் பின்னல் முறுக்கும்
சாய்ந்துசறுக்கும்

முருக்கிதழிசையும் மூச்சுவிம்மிசையும் முன்பின் முரணிக்கிறுக்கும்
கச்சு பிதுங்கும் கலைகளொதுங்கும் கண்சுழன்றுவரிதுள்ளும்
வச்சிரவுலக்கை பிடித்தைகைமேல்கீழ் வாங்கிவாங்கிவிசை கொள்ளும்
அங்கங்கள்யாவும்பொங்கவே அங்கைகள் செங்கைகளாகவெதும்பும்
கொங்கைகுனிந்து நிமிர்ந்து ததும்பும் கொம்பிடை எம்பிஎழும்பும்
கிண்கிண்ணுலக்கைப் பூணிடித்திடும் கிண்ணாரத்தொலிதட்டும்
கிண்கிணிமேகலை காலணிகைவளை கிலுக்கிய துள்ளிசைகொட்டும்
கலீர் கலீரெனக் கைவளை பம்பக் கனக முறத்தை எடுத்தே
சிலீர்சிலீரென மேனிசிலிர்க்கச் செந்நெல்புடைத்திடுவாரே
பொன்புகையென்னத் தவிடுமி பொங்கிக் கன்னியர்மேனிமினுங்கி
என்னவேதழுவித் தரையினிற்புழுதி எழுப்பியசெந்நெல்முற்றம்
மைந்தரும் மாதரும் மக்களும் சுற்றமும் வந்தவிருந்தினர் தாமும்
நொந்தவர்க்கன்னமளித்துமகிழ்ந்தபின் பந்திநிறைத்திடுவாரே
மணிமணியான சம்பா அரிசி மலைமலையாகக்குவியும்
மணிமலர்மாலை மாதர்கள் மார்பின் மலைகளில் நதியெனமலையும்
பதருமி மலையாம் தவிடொருமலையாம் பண்ணையில் வைக்கோல் மலையாம்
புதியதாழியில் ஆவியின்முகிலொடு பொங்கிய சோறு பல்மலையாம்
கன்னலின்சாறு கனிந்திடும் வெல்லக் கட்டிகளவைபல மலையாம்
மன்னிய மேனியை மங்கலஞ் செய்திடும் மஞ்சளின் கொத்துகள் மலையாம்
வாழைத்தாரொருமலையாம் கனியின் வகைகள் பலபல மலையாம்
வாழும் தெய்வம் மகேசன்கோயில் வாயிற்கோபுரம் மலையாம்
நென்மலைவாங்கிய பொன்மலைரத்ன மின்மலையெங்கணுமெங்கும்
கன்மலையில்லா மருதப்பூமியின் பன்மலை யாகியதேசம்
பாலைப்பாய்ச்சிப் பண்ணைவளர்க்கும் பழமையானதோர் தேசம்
தேனைப்பாய்ச்சிச் செந்நெல்விளைக்கும் செழுமையானதோர் தேசம்

கடற் கரை

தென்னைமரத்தின் கிற்றுகள்கதிரின் பொன்னொளியைச் சலிசலிக்கும்
தென்னோலைப்படல் வேய்ந்த கூரைகள் செவ்வொளியிற் சிரிசிரிக்கும்
ஓடுபோட்டதோர் வீடுகள் செம்மண் ஓவியம் திட்டியமனைகள்
மாடமாளிகை கூடகோபுரம் வாய்ந்ததிர்ந்த நந்நாடு

கடலலேவிசிறும் கரைமணல்விசிறும் கடல்வலே வெயிலிற்காயும்
வடவரைமுதலாக் கடல்வரையுள்ள வளமெலாம் வளமுறவளரும்
உப்புவாணிகர் மீன்விலேவணிகர் உழத்திகள்கடலே உழுவார்
கப்பல்வாணிகர் கொணருஞ் செல்வக் களிமிகுந்ததேசம்

பொது நலம்

கோடிகோடி ஜனக்கூட்டம் யாவுமோர்கொள்கை கொண்டதேசம்
கூடியாவரும் மோடியின்றியே குறைகள் தீர்ந்ததேசம்
ஆயிரமாயிரம் பாஷைகளாயினு மவற்றின் பொருளொன்றே
பாயிரவேதங் காட்டியபழமைப் பயன்பொதுவாம் தேசம்
பஞ்சத்துக்கே பஞ்சமாம்வேறே பஞ்சமிலாததேசம்
வஞ்சத்துக்கே வஞ்சனேவேறே வஞ்சனேயில்லாத்தேசம்
வறுமையேவறுமை மற்றவையாவும் வளமிகுந்த நந்நாடு
சிறுமையேசிறுமைப் படுமற்றெல்லாம் சீர்சிறந்த நந்நாடு
பொய்யொன்றேதான் பொய்யாம்வேறே பொய்யிலாத நந்நாடு
வையம்வாழ மன்னுயிரீந்த வள்ளல்கள் வாழ்ந்தநாடு
இல்லேயென்பார்க்கே யில்லேயென்னுத யீகை நிறைந்தபூமி
வல்லவர்வல்லமை புல்லியதாச்செயும் வல்லவர் வாழ்ந்தபூமி
அன்பேகடவுள் அறமேவாழ்வாம் அருளே வாழ்வின்சீராம்
மன்பேரறிவே வாழ்வின்திறலாம் மாண்பு கொண்டதோர்பூமி

பழங் கதை

இத்தகைநாட்டிற் கிடையிலே பெரிய இடையூ றுற்றதுவே
வித்தகராகிய மன்னர்க ளாசைப் பித்தர்களாகினரே
அசோகரன்பெனு மறநெறிகாட்டியே ஆட்சிசெய்த தேசம்
அநேகமன்னர்கள் விண்வழக்கிடவே அழிந்துபோனதந்தோ
அருதஅன்பின் தறியையறுத்தே அவலமுற்ற காலம்
பொருமையுற்றுச் சிற்றரசர்கள் போர்புரிந்த காலம்
ஒற்றுமையின்றி வேற்றுமைதன்னே ஓங்கவிட்ட காலம்
சுற்றச்சோதரர் தங்களுக்குள்ளே சூட்சிசெய்த காலம்
மாற்றானுக்கிடம் கொடேலென்றிடும் மதிமறந்து மன்னர்
வேற்றாளேத்துணே கூட்டியே வீணுய்விறலழிந்த காலம்
பாரிரண்டுபல படவேபாரதப் பண்பழிந்த காலம்
ஊரிரண்டுபடக் கூத்தாடிக்கெளி துண்மையான காலம்
க்ரேக்கர்வந்தனர் வந்துபோயினர் கிறுங்கிய இந்நாடு
தீர்க்கமாகிய சாணக்யன் நெறி தேர்ந்தது மிந்நாடு
சந்திரகுப்த சாணக்யரோடே சார்வபௌமம் போச்சு

தந்திரவஞ்சம் சுதந்திர வாழ்வைத் தானுண்டிடலாச்சு
மேற்கிஸ்லாமியர் வெம்படை நம்மேல் வீறிப்பாஞ்சதுவே
சேர்ப்படுந்தேசஞ் சிதைந்திடவேபல தீம்புகள் செய்ததுவே
ஈட்டிமுனையிலே குரானைக்காட்டி இஸ்லாமா யிலேயேல்
கூட்டினிலாவியை வீட்டுவேனென்றே கொக்கரித்து வந்தார்
கோயிலழிந்தது கோபுரஞ் சாய்ந்தது கும்பிடு போட்டோமே
தீயிலே வூர்கள் வெந்து தணிந்தன திகைத்து நின்றோமே
கொள்ளைகொள்ளையாக் கொட்டிவைத்ததனம் கொள்ளையடிச்சாரே
பிள்ளைகுட்டி பெண்டோடே தெருவில் பேச்சற்று நின்றோமே
கன்னியர் கற்பை அழித்தனர் சும்மாக் கைகட்டி நின்றோமே
அன்னியருக்கே பெண்டு கொடுத்தே அடிமைகளானோமே
சொற்படி கேட்டு வணங்கினபேரைச் சோதரராக் கொண்டார்
அப்படி யில்லாதவரை வாளா லறுத் தெறிந்தாரே
கொஞ்ச நாளினில் சூறையிட்டதோர் கொள்ளைக் கூட்டத்தார்
நெஞ்சுமாறியே டெல்லியை யாள நிச்சயம் செய்தாரே
எல்லைத்திருடர் டில்லி பாதுஷா என்ற பட்டம் பெற்றார்
தொல்லைகளோடே நல்லதும் செய்யத் துணிந்துவிட்டாரெ
அக்பரன்பெனும் அறநெறியாலே ஆட்சி புரிந்தாரே
மிக்கதோர் ராஜபுத்திரர் துணையால் மேன்மை யடைந்தாரே
இஸ்லாமிந்து யாவருமொன்றே யிறைவன் திருமுன்னர்
விஸ்வாஸந்தான் மனித வாழ்க்கையின் வேர்ப்பொருளென்றாரே
ஆனாலந்தோ அக்பர் வகுத்தநல் அன்பை மறந்தாரே
தீனிஸ்லாமின் பேரால் பற்பல தீம்புகள் செய்தாரே
அப்பால் வந்த ஔரங்கஜேபு அடம்பிடித்தாரே
தப்பாமுறையில் ஹிந்துக்களையே தள்ளியே வைத்திட்டார்
தந்தையைச் சிறையில் வைத்தார் சோதரர் தம்மை யழித்திட்டார்
இந்த முறையிலே சிம்மாஸனத்திலேறி யமர்ந்திட்டார்
கூனிக்குறுகிய கோணல்முதுகுக் கோமான் நெஞ்சத்தே
ஆணியறைஞ்ச உறுதியினோடே அட்டூழியஞ் செய்தார்
உறங்கிய ஹிந்துஸ்தானம் விழித்தது உதறி எழுந்ததுவே
கறங்கெனச் சுழலும் கத்தியின்மேலே கட்டுரை யிட்டதுவே
சீக்கியர் யாவரும் சிங்கெனமாறித் தீயின் விழித்தாரே
தாக்கிய பேர்களைப் போக்கிடுவோ மெனத் தலை நிமிர்ந்தாரே
சிவாஜி யென்னும் வீரச்சிங்கம் சீறி எழுந்ததுவே
பவானி தேவியின் பக்தியில்வீரம் பாய்ந்து பரந்ததுவே
டில்லியின் பாட்சாக் கெதிராமற்றச் சில்லுண்டி பாட்சாக்கள்
வல்லமைபேசித் தான்தோன்றிகளாய் மன்னவரானாரே
தடியெடுத்தவன் தண்டக்காரன் சங்கதியாப் பேச்சு

குடிகெடுத்தவன் கொண்டைக்காரன் கும்மாளமாப் போச்சு
அசையாமுஸ்லீ மாட்சியின்வேரில் ஆட்டங் கண்டதுவே
திசையறியாத கப்பலெப்போலத் திக்குமுக்காடியதே
எங்குஞ்சண்டை எங்குங் கலகம் எங்கும் களயபரம்
பொங்கும்போதில் அங்கங்கே தான் புதுப்புது ராஜாங்கம்
என்னவே நாடு சின்னபின்னமாய்க் குன்னும் காலத்தே
அன்னியன் வெள்ளை யசலானிங்கே அடியெடுத்துவச்சான்

கும்பினி வருகை [கட்டபொம்மு மெட்டு]

இந்தப் பளங்கதெ திருமுன்னே - இங்கிலீஸ் கும்பினி வந்ததுவும்
சந்தைக்குச் சரக்கு விக்கவந்தெ - சர்க்கராய் மாறிய சங்கதியும்
ஒண்டவந்திட்ட பிடாரியதே - ஊர்ப் பிடாரியெ ஓட்டுதல்போல்
அண்டிப் பிழைத்திட வந்தவரே - ஆளத்தொடங்கிய சங்கதியும்
கத்திமுனையிலே கண்டதில்லே - களத்தில் போரிட்டு நின்றதில்லே
ஒத்துமையத்த குடும்பத்திலே - ஊடே நொளஞ்சி கொண்டதையா
வாளின்முனையிலே கண்டதில்லே - தோளின்வலுவிலே
வென்றதில்லே
ஆளின்மே லாளினைத் தூக்கிவிடும் - கூளெக்குறும்பிலே
கொண்டதையா
ஈட்டிமுனையிலே கண்டதில்லே - எகிரிப் பாஞ்சி வென்றதில்லே
நாட்டைப் பிரிச்சி நகர் பிரிச்சி - நட்ட நடுவே புகுந்ததையா
துப்பாக்கிக் குண்டு வெடிவெடிச்சி - தொமிசஞ் செஞ்சுமே
வென்றதில்லே
நப்பாசை காட்டியே பல்லிளிச்ச - நயவஞ்சகத்தால் கொண்டதையா
அப்பத்தெப்பங்கிடப் பூனைகளே - அந்தக் குரங்கிடம் போனகதெ
தொப்பிகவுத்த துரைமகனே - சூச்சியால் நம்மை
யேமாத்துங்கதெ
இந்துவும்முஸ்லீமும் சண்டையிட்டார் - இங்கிலீஸ் காரெனெயண்ட
விட்டார்
சந்திசிரிக்குந்தம் சச்சரவில் -சமாதானஞ் செய்ய வேண்டிக்கிட்டார்
ராவுத்தன் நாயக்கன் சண்டையிலே - ராயெத்தனது
வெள்ளக்காரன்
காவு கொடுத்தது நம்பவங்க - காசினியாண்டவன் வெள்ளக்காரன்
பாப்பான் பறையன் சண்டையிலே - பட்டாணிச்சத்திரியன்
சண்டையிலே
தாப்பாளில்லாத வூட்டுக்குள்ளே - தானுநொளஞ்சவன்
வெள்ளக்காரன்

சீக்கியரோடே முஸ்லிம்கள் - சிண்டெப்புடிச்சிண்டு நிக்கையிலே
காக்க வந்தோமென ரெண்டுபேரின் - காணியுங் கொண்டவன்
வெள்ளக்காரன்
சிங்க மராட்டியருந் துருக்கர் - சேனையுஞ்சிறி மல்லாடையிலே
இங்கிதம் பேசி யிருவருக்கும் - இடையில் வென்றவன்
வெள்ளக்காரன்
வங்கத்துப் பூசெலெத் திப்பமென்றே - வாரிக் கொண்டவன்
வெள்ளக்காரன்
தங்கத்தமிழ்நாட்டு வேந்தர்களைத் - தட்டிப்பறிச்சவன்
வெள்ளக்காரன்
தெம்மது ரெத்தஞ்சா வூர்திருச்சி - திங்கவேலிச்சீமெப்பாளையங்க
திம்மலுறுந்திப்புச் சேனையையும் - தில்லுமுல்லுஞ் செஞ்சான்
வெள்ளக்காரன்
மொட்டெத்தலையும் மொளங்காலும் - முடிச்சுப்போட்டு
மொளங்கிக்கிட்டு
அட்டாள தேசத்து வேந்தர்களே - அடக்கிக்கொண்டவன்
வெள்ளக்காரன்
வெள்ளையுஞ் சள்ளையு மாகவந்தான் - வேசத்தெக்கண்டு
மயங்கிப்புட்டோம்
கொள்ளையடிக்கவந்தானிடமே - கூலியாளாக நாம் சேந்துக்
கிட்டோம்
வெள்ளக்காரன் பணம் வெள்ளிப்பணம் - வேடிக்கை செய்யுதாம்
அந்தப்பணம்
வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்பட்டே - விட்டினைக் காட்டிக்
கொடுத்துப்புட்டோம்
வெள்ளக்காரன் தண்ணி சேப்புத்தண்ணி - வெப்பு வெறியுள்ள
கள்ளுத்தண்ணி
கள்ளேக்குடிச்ச மயக்கத்திலே - கையெழுத்து வாங்கிக்
கொண்டகதெ
வெள்ளக்காரிச்சி வெளுவெளுப்பே - வெந்தபளம்போல்
மினுமினுப்பெ
உள்ளத்தில்கொண்டு மயங்கிப்புட்டோம் - ஊரெயடிமெப்
படுத்திப்புட்டோம்
பிச்சைக் காசுக்கு ஆசைப்பட்டு - லச்செகெட்டுப்போன நம்பவங்க
லச்சலச்சமாக் கும்பினியில் - லாட்டு லாட்டாகச் சேந்துக்கிட்டார்
துட்டுத்துக்காணிக் காசைப்பட்டு - சூடுசொரணெ யில்லாதவங்க
பட்டாளத்துலே சேந்துக்கிட்டு - பாரதநாட்டெப் பறிகொடுத்தார்
லஞ்சலாவணம் வாங்கிக்கிட்டு - ராங்கி பேசித் திரிஞ்சிக்கிட்டு

கொஞ்சங் கொஞ்சமாய் நம்மவரைக் - கொள்ளையடிச்சதும்
நம்மவரே
தூண்டில் நுனியிற் புழுவினையே - சுண்டியகப்பட்ட மீனெனவே
வேண்டிய வெள்ளையங் காசினுக்கே - விரும்பியடிமைப் பட்டோமே
மயிலி னுட்டத்தைக் கண்டதிலே - மயங்கிச் சிக்கும் புளுப்போலே
அயலா னுடம்பரத்தைக் கண்டே - அம்பிட்டுக்கொண்டாங்க
நம்பவங்க
சொந்த மரத்தொரு கம்பதுவே - தூக்கிய கோடலிக்காம்பாகச்
சொந்த மரத்தையே வெட்டுதல்போல் - சோதரர் நம்மைத்
தொலச்சுப்புட்டார்
கள்ளத்தனமாகக் கன்னமிட்டான் - கன்னமிட்ட கையில் கடக
மிட்டோம்
கொள்ளையடிச்சவன் கொள்ளவில்லே - அள்ளிக்கொடுத்து
விட்டோம் நாமே
நல்ல மரத்தையே புல்லுருவி - நாசப்படுத்திக் கெடுப்பதுபோல்
கொல்லுங்கொலைக் கொள்ளைக்காரரையே - குடியாக் கொண்டு
விட்டோம் நாமே
உளுதுவெதச்ச நெலத்தினிலே - உள்ளானெக் குடிவெச்சதுபோல்
முளுதும் நெல்லாங்கோட்டையிலே - முட்டெலியைப் பூரவிட்டது
போல்
பாலுக்குப் பூனெயெக் காவல்வச்ச - பாங்கினில் வெள்ளைப்
பட்டாளத்தையே
நாலுதிசையிலும் நாட்டிப்புட்டோம் - நட்டநடுவே யடிமைப்
பட்டோம்
கள்ளமில்லாத சனங்களையே - கவடில்லாத மனங்களையே
குள்ளநரித்தனஞ் செஞ்சிக்கிட்டு - கும்பினிக் கும்மாளமிட்டதுவே
இடங் கொடுத்தது சாணகலம் - எடுத்துக்கொண்டது
வேணதெல்லாம்
கடங் கொடுத்துமே தேசமெல்லாங் - கைவசஞ் செஞ்சானே
வெள்ளக்காரன்
ஆட்டெப்புடிச்சி யடம்புடச்சி - மாட்டெப்புடிச்சி மடம்புடிச்சி
கோட்டெக் கொத்தளங் கட்டிக்கொண்டு - குண்டுபீரங்கியெ
வச்சிக்கொண்டு
தட்டித் தடுக்க ஆ ளில்லையிங்கே - சண்டப்ரசண்டமாச் சாடுகிறான்
கொட்டிடுந்தேளுக் கதிகாரங் - கொடுத்தாற் சும்மாயிருந்திடுமோ
ஆளுமன்னர்க் கலவன்ஸாம் - ஆளடிமைக்கெல்லாஞ் சம்பளமாம்
கோளெப்புரிஞ்சிக் குடிகெடுக்கும் - குத்திரக்காரர்க்குக் கிம்பளமாம்
பட்டாளத்துக்குப் படிச்செலவும் - பட்டாளக்காரர் குடிச்செலவும்

கட்டாயமாக நம் நாட்டினரே - கையிலிருந்து கொடுக்கணமாம்
பிள்ளையில்லாத சொத்துக்களின் - பிள்ளைகள் நாங்களேயென்னு
சொல்லி
கொள்ளையடிச்சானே வெள்ளக்காரன் - கும்பிடுபோட்டாரே
நம்பவங்க
சிமெச்சரக்கெக் கொண்டுவந்து - தேசத்திலெங்கும் பரப்பிவச்சி
சேமமுறும் நம்ம கைத்தொழிலெச் - செல்லர்கப் பூந்து செரிச்சுப்
புட்டான்
கட்டெவிரலினெ வெட்டிப்புட்டான் - கதருடெயெ நசுக்கிப்
புட்டான்
கட்டத்துணிக்கும் நாமிங்கிலீசுக் - கப்பலெக்காத்திடச்
செஞ்சிப்புட்டான்
தொப்பியெக் கண்டால் தொடைநடுங்கும் - துப்பாக்கி கண்டால்
படைநடுங்கும்
இப்படியாக நம் வீரமெல்லாம் - ஏட்டுப்பளங்கதெயானதுவே
சிப்பாயெக் கண்டால் ஜெகநடுங்கும் - சென்தோலெக்கண்டாலக
நடுங்கும்
கொப்பியடித்திடும் பெண்டுகளின் - கூட்டத்தில் வீரம்
கொழுந்துவிடும்

சிப்பாய்க் கலகம்

இப்படி யாகவே நம் ஏற்றமெல் லாஞ் சிதறிச்
செப்படு வித்தையைப் போல் தேய்ந்துகன வாகிறதும்
நாளாக நாளாக நல்லவனைப் போலிருந்தான்
தேளாகக் கொட்டிவரித் தெண்டந்திரட்டுறதும்
நாட்டிலுறுஞ் செல்வ நலஞ் சுரண்டி யப்போதே
மூட்டெகட்டித் தம்மூர்க்கு முன்னே யனுப்புறதும்
அண்டிப் பிழைக்க வந்தா னடங்காப் பிடாரியவன்
கண்டனையுந் தண்டனையும் கட்டுத்திட்டம் செய்கிறதும்
கண்டார்கள் தேசமக்கள் கனன்றார்க ளுள்ளத்தே
கொண்டார்கள் தேசபக்தி குமுறி எளுந்தாங்க
நீட்டியிருக் கும் வாலில் நெருப்புக் கொளுத்தியுந்தன்
பாட்டுக்குத் தூங்குமலைப் பாம்பெனவே தாமிருந்தார்
கூட்டிலே கொப்பரையெக் கொத்தியதோர் சுண்டெலிபோல்
மாட்டிக்கிட்ட பின்னரந்தோ மதிமருண்டு கண்விளிச்சார்
அட்டையைப் போல்மடங்கி யடங்கிக் கிடந்தவர்கள்
சட்டென்னப் பாம்பாகித் தலையெடுத்துத் தான்கிமிர்ந்தார்
வெளவாலெப் போல்முடங்கித் தவ்விக் கிடந்தவர்கள்

ஜிவ்வென்னக் கருடன்போல் சீறி எளுந்தாங்க
பூனையெப் போலொடுங்கிப் பொந்தி லிருந்தாங்க
கானப் புலிபோலக் கடுக விளிச்சாங்க
சீமெப் பட்டாளத்தில் சேர்ந்துக்கிட்ட நம்மவரின்
தீமைகளெல் லாமகற்றித் தேசபக்தராக்கி விட்டார்
பாட்டும் பஜனைகளும் பட்டாள முச்சூடும்
கூட்டுமிட்டுத் தேசபக்திக் கொளுந்துவிடச் செஞ்சாங்க
சிப்பாய்க ளெல்லோரும் சீறிச் சினந்தாங்க
தொப்பித் தொரைகளையே தொமிசஞ்செஞ்சி போட்டாங்க
கொள்ளையடிச்சாங்க கொடுஞ்சூறை யிட்டாங்க
கொள்ளிவச்சிக் கொள்ளிவச்சிக் கொடமொடச்சி நின்னாங்க
கண்டவுட னிங்கிலீஸுக் காரனெத் தூக்குறதும்
கொண்டயிட மெல்லாந்தங் கொடிமரத்தை நாட்டறதும்
கண்டுகொண்ட கும்பினியார் கதிகலங்கிப் போனாங்க
துண்டாடத் துப்பாக்கித் தோட்டா எடுத்தாங்க
குடிகெடுக்கும் குள்ளநரிக் கூட்டத்தெச் சேத்தாங்க
படிகொடுத்து நம்மவரின் பலத்தை அறிஞ்சாங்க
குண்டு பீரங்கிகளெக் கோத்துவெடி வெச்சாங்க
தண்டெடுத்து நம்மவரெத் தவிடுபொடி செஞ்சாங்க
நம்மிடமோ துப்பாக்கி நச்சுக் குளலிருந்தும்
வெம்மையுறுந் தோட்டாவும் வெடியுந்தான் பத்தவில்லே
வேட்டுப் பீரங்கிகளெ வேட்டுவிட வேட்டில்லே
கூட்ட மிருந்தாலும் கூட்டுறவு போதவில்லே
இப்படி யாகவேதா னெளுந்த புரச்சியது
கொப்பளித்த நீர்க்குமிளிக் கொடமுடஞ்சு போவதுபோல்
சீறியபுஸ் வாணமொன்று ஏறிவிண்ணிற் தான்பறந்து
மீறிக் கணஞ் சொளண்டு விளுந்தகதெ யானதுவே

ராணியின் ஆட்சி

ஆனாலுங் கும்பினியி னட்டூளியங்களெலாம்
நானா திசையிலுள்ள நாடுகளுந் தாமறிய
நாணமுற்றா ரிங்கிலீஸு நாடாண்ட ராணியம்மாள்
கோணலாறுங் கும்பினியின் கொள்கை நடவாதென்றே
கள்ளம் விசாரிச்சிக் கண்ணைத் தொடச்சிப்புட்டு
வெள்ளை மகராணி விக்டோரியாச் சீமாட்டி
நேரே ராஜாங்கத்தெ நேர்மை யுடனாளச்
சீரான பட்டபத்தால் செங்கோலெ தூக்கிப்புட்டார்

இங்கிலீஸ் ராஜாங்கத் திணைப்பான ராஜாங்கம்
உங்கள தாமென்றே உத்தரவு போட்டுவிட்டார்
சிறிது சிறிதாக யிந்தத் தேசத் தரசாட்சி
உறுதியாத் தந்திடுவோ மென்றே யுரைத்தார்கள்
ஆறுயிர மயிலுக் கப்பாலே ராணியம்மாள்
பேராலே ராஜாங்கப் பெரியதனம் செஞ்சாங்க
கலகம் வராதபடி கலாட்டா யில்லாதபடி
பலமான திட்டங்கள் பலப்பலவாப் போட்டாங்க

ஆட்சியின் விளைவு

காக்கவே நாங்களுண்டு கத்திகப டாயெதுக்கு
சோக்காகவே நீங்க சொகமா யிருந்திடுங்க
நீராவிக் கப்பலிலே நெறெஞ்சபொருள் கொண்டுவரோம்
தாராள மாவாங்கித் தளுக்கா இருந்திடுங்க
பூத்துப் பூத்தென்னப் பொகெவண்டி யோட்டுகிறோம்
தீத்தயாத்திரெ சென்னு தேசமெல்லாஞ் சுத்திடுங்க
அடுத்தடுத்துக் கம்பநட்டு அதற்குமேல் கம்பியிட்டு
தொடுத்த தந்திச் சேதியெல்லாம் சொகமாகக் கேளுங்க
காலத்தெக் காட்டுதற்குக் கடிகாரம் வச்சிருக்கோம்
பாலங்கள் போடுகிறோம் பலரோடு போடுகிறோம்
போக்கிலிகள் சாக்கிலிகள் பூந்துகொள்ளெ கொள்ளாமல்
காக்கவே போலீசுக் கங்காணம் வச்சிருக்கோம்
எல்லாம் நமக்கென்னு ஏமாத்திப்புட்டாங்க
குல்லாக் கவுத்து மண்ணெக் கொளச்சி நாமம் போட்டாங்க
சிறியனுங் கொளந்தக்கி சீனிமிட்டாய் தந்தாப்போல்
மீறிவரும் நாய்க்கெதிரே வெத்தெலும்பு போட்டாப்போல்
வீரங் கொறஞ்சிடவே வெளையாட்டுக் காட்டிப்புட்டார்
சாரங் கொறஞ்சிடவே சர்க்காரெ நாட்டிப்புட்டார்
நமக்காகத் தந்திதபால் நல்லரயில் போடவில்லே
தமக்காகப் பட்டாளம் தனக்காகப் போட்டதது
எட்டுத்திக் குங் கலக மெல்லா மடக்குதற்கும்
அட்டாள தேசமெல்லா மாணை செலுத்துவதற்கும்
வரிவசூல் செய்வதற்கும் வஞ்சம் புரிவதற்கும்
பிரித்துப் பிரித்து நம்மெப் பேதப் படுத்துதற்கும்
தண்டவாளம் போட்டார் தந்திமரம் நட்டார்கள்
வண்டவாளத்தெயெல்லாம் வகைவகையாச் சொல்லுகிறோம்
ஆயுதம் பிடுங்கிக்கிட்டு ஆட்டுமந்தெ போலாக்கிக்

காயிதக் கணக்கெழுதக் கத்துக் கொடுத்தாங்க
கவர்மெண்டுக் காள்புடிக்கக் காலேசு கட்டிவச்சி
நெவர்மைண்டு யிங்க்லீசை நெரம்பக் கொடுத்தாங்க
சொந்தமொளியெப் படிச்சா துட்டுத்துக் காணியில்லே
அந்த மொளியைப் படிச்சா லரமணிமி லுத்யோகம்

ஆங்கிலப் படிப்பு

ஆங்கிலம் படிச்சுக்கிட்டு அடிமைக் குமாஸ்தாவாய்
ராங்கிபேசி நம்பவங்க ரகளெ புரிஞ்சாங்க
ஒசந்தபடிப் புப்படிச்சி ஊர்க்கலக்ட ராளுங்க
அசந்து விட்ட நம்பவரெ அதட்டிப் பறிச்சாங்க
வக்கிலுக் குப்படிச்சி வக்கணையாப் பேசிக்கிட்டு
கைக்கூலி வாங்கிப் பொய்யின் கடெபரப்பி விட்டாங்க
இங்கிலீஸ் மோகத்தில் எல்லாம் மறந்தாங்க
தங்கள் மொளி நாகரிகத் தன்மையெலாம் விட்டாங்க
வீரம் மறந்தாங்க வெத்தடிமை யாளுங்க
தீரம் மறந்தாங்க தெம்புகெட்டுப் போளுங்க
வீரங் கடையினிலே விப்பதல்லால் வீரமில்லே
சாரம் நவாச்சாரம் தம்மநெஞ்சிற் சாரமில்லே
காரம் சமையலிலே கருத்திலே காரமில்லே
ஈரம் தண்ணீரினிலே எம்முளத்தி லீரமில்லே
அவ்வூரான் நாட்டெ யரிச்சிப் புடுங்கிடவே
இவ்வூரா ளாக யிங்க்லீஸ் படிச்சானே
உச்சியிலே கோபுரம்போல் ஒசந்த குடுமிவெட்டி
குச்சு மயிர் க்ராப்புவச்சிக் கோண வகிடெடுத்தார்

வெள்ளை வேஷம்

[தேசிங்கு ராஜன் மெட்டு

பட்டு நெத்தியில் பொட்டில்லாமற் பாளாகப் போச்சே
கெட்டிப்பல்லெக் கெடுக்கப் பசெயக் இறுக்கீம் ப்ரஷ்ஷாச்சே
கட்டுக்கட்டாப் பொஸ்தகம் படிச்சி கண்ணவிஞ்சிபோச்சே
சட்டமிட்டகண் ணாடி மூக்குமேல் தாண்டவமிடலாச்சே
குந்திக்குந்திக் குனிஞ்சிவரஞ்சி கோணல் முதுகாச்சே
மொந்தெமொந்தெயா உருப்போட்டுள்ள மூளெவரண்டுபோச்சே
காப்பித்தண்ணியெக் குடிச்சேதேகக் கட்டுக்களண்டு போச்சே
தீப்புச்சிகரெட் புடிச்சே மேனித் தேவாங்கெலலாச்சே
கூடமொறெத்தெக் கவுத்தாப்போலக் குல்லாபோட்டாங்க
சோடுதவலெக்கிக் கைகள் வச்ச சொக்காப் போட்டாங்க
காலன் செறகெப் போலக் கழுத்தில் காலர் போட்டாங்க

மேலுந்தூக்குக் கவுறென நெக்டை மென்னி முறிச்சாங்க
வானவில்போல கரைகள் மடிச்ச வத்திரம் விட்டாங்கக்
ஆனெக்காலெப் போலச் சூட்டெ யணிஞ்சி கொண்டாங்க
கொஞ்சங் காத்தும் படாது ஸாக்குக் கொளாயணிஞ்சாங்க
புஞ்சம் வச்ச செருப்புக்குப் பதிலாப் பூடுசு போட்டாங்க
கப்பிய பனிக்கு வெள்ளக்காரன் கண்டுகொண்ட ட்ரெஸ்ஸெ
வெப்பிய வேனல் நாட்டிலணிஞ்சி வெந்து பொகஞ்சாங்க
அடவில்லாதே போன பசங்க அடம்புடிச்சாங்க
கடவுளின் பேரைக் கண்ருவியாகக் கத்தரிச்சிட்டாங்க
இப்படியாக இங்க்லீஸ் மோகம் எங்கும் பரவிச்சே
அப்பாடாநம் பெண்டுகளுக்கும் ஆசெபுடிச்சிச்சே
மல்லிகை முல்லெ வாசனெவீசும் மலரெமறந்தாங்க
குல்லெகுல்லையாக் கனகாம்பரத்தின் குவியலணிஞ்சாங்க
கொண்டையை நீண்ட பின்னலை மறந்தார் கோணவகிடுநீவி
ரெண்டுங்கெட்ட ரெட்டெப்பின்னலில் ரிப்பன் வச்சாங்க
மஞ்சக்குளியெ மறந்து மொகத்தில் மாவுபூசினுங்க
கொஞ்சங் கொஞ்சமாய் ரவிக்கையெக்குறுக்கி குஞ்சம் வச்சாங்க
வண்ணச் சேலெயெ வளச்சி வளச்சி வாரிக்கட்டும் பொங்க
மொண்ணெமாம்பளப் பொடவெயெக்கட்டி மொட்டையாநின்னுங்க
சோப்பு சீப்புப் பவுடர்க்ரீமு சோக்குமிகுந்திச்சு
சாப்புக் கடெயிலே தினுசுதினுசாச் சரக்குகள் வந்திச்சு
சந்தி சபங்கள் சாத்திரமெல்லாம் சங்கடமாப் போச்சு
சந்துகளெல்லாம் காப்பிக்கடெயுடன் க்ஷவரக்கடெயாச்சு
வெள்ளெக்காரனெப் போல் நம்மவங்க வேசம் போட்டாங்க
உள்ளூர்க்காரெனக் கண்டால் வெறுத்து ஒதுங்கச் சொன்னுங்க
ஒசந்த சாதி நாங்களே யென்று உருட்டால் போட்டாங்க
உளுத்தசாதி உள்ளூர்க்குள்ளே ஒளெப்பவனென்னுங்க
பட்டிக்காட்டான் பட்டணம்வந்து படிச்சிக்கொண்டானே
குட்டிப்பிசாசு போலமக்களெக் கொடுமெபுரிஞ்சானே
பஞ்சமேயில்லா நாட்டினிலெங்கும் பஞ்சம் வரலாச்சே
கொஞ்சநஞ்சமா யுள்ளதும் வெள்ளெக் காரன் கொள்ளலாச்சே

காங்கிரஸ் உதயம்

இந்த நெஜெயினெக் கண்டார் சிலபேர் ஏக்கங்கொண்டாரே
சொந்தக்காரன் ஊட்டுலே சூதுக் காரன் சூச்சிகளா ?
முண்டாசுக்கு மேலே தொப்பி மொளக்கஞ் செய்யறதா
கண்டாங்கிக்கு மேலே கவுனு கண்ணியமான துவா

கருப்பானுக்கோர் நீதி வெள்ளைக் காரனுக்கோர் நீதி
இருப்பாயிதுவும் என்று குதிச்சே எளுந்து நின்னுங்க

[கண்ணிகள்

கனவு கண்டு கொண்டருந்தோம் கஷ்டம் தெரியாமல்
நெனவுகொண்ட போதறிஞ்சோம் நெசமான சேதியெல்லாம்
கள்ளு மயக்கத்திலே கதெச்ச கதெகளெல்லாம்
தெள்ளத் தெளிஞ்சவுடன் தெசெமாறிப் போவதுபோல்
புள்ளெதான் பொம்மையுடன் பொளுதெக் களிச்சபின்னர்
துள்ளும் பசிவரவே துண்ணென் றெளுவதுபோல்
வெள்ளை மயக்கத்திலே வெளையாடிக் கொண்டிருந்தார்
உள்ளந் தெளிஞ்ச சிலர் ஒன்றாகக் கூடிவிட்டார்
வஞ்சனையெக் கண்டு வகைமோசம் வந்ததென்று
நெஞ்சுறுதி கொண்டுசிலர் நிறுவினர் காங்கிரசெ
ஆயிரத்தி எண்ணூரத்தி யான எண்பத் தஞ்சினிலே
பாயிரமா விடுதலைக்குப் பாத்திகட்டி வச்சாங்க
வெள்ளையனே யானாலும் வெறுப்பறியா ஹ்யூமு தொரெ
தெள்ளுஞ் சுதந்திரத்தின் வெதையெத் தெளிச்சாரெ
தாதாபாய் நௌரோஜி தனியாக நாத்து நட்டார்
மேதாவிக் கோபாலன் வெள்ளாமெ காத்திருந்தார்
பேச்சென்னும் தண்ணீரைப் பாய்ச்சிப் பயன்படுத்தி
நோச்ச லுறுமடிமை நோவொளிப்போ மென்றுரே
காங்கிரஸி லப்போது காயிதத்தில் மனுவெளுதி
ஆங்கிலருக் கேயனுப்பி யாதரவு கேட்டதுவும்
ஆனையுண்ட தீங்கனியை அருங்கனியா விப்பதுபோல்
தானமெனச் சுதந்திரத்தின் சாயைநிழல் தந்ததுவும்
எங்கள் திலகமுனி எதிர்நின்று சுயராஜ்யம்
எங்கள் பிறப்புரிமை என்று மொளங்கியதும்
கொடுங்கோ சுதந்திரத்தெக் கொடுக்கா விடில் நாமே
பிடுங்கிக் கொள்வோ மென்னப் பேராண்மை காட்டியதும்
விதேசித் துணி வேண்டாம் சுதேசி வேண்டுமென
இதோப தேசஞ்செஞ்சி யெம்மை எளுப்பினதும்
சயிலுக்குத் தான்சென்று தவங்கள் புரிஞ்சதுவும்
அயலச்சி யாயிடினும் அன்னை வசந்தையவர்
இந்தியக் குடியாச்சி தந்திடெனச் சாற்றியதும்
இந்தவித மாய்ப் பலபேர் என்னென்னமோ செஞ்சும்
அந்த அரசாங்க மசையாமல் நின்னதுவும்
பந்தமுற்று மக்களெலாம் பரதவிச்ச சங்கதியும்

ஏதும் வளி காணாமல் ஏங்கி யிருக்கையிலே
மோதும் படை யில்லாமல் முடங்கிக் கிடக்கயிலே

காந்தி வருகை [கட்டபொம்மு மெட்டு]

தீமைகள் யாவையுந் தீஞ்சிடவே - தேச மெல்லாங்களி பாஞ்சிடவே
சேமக் கடலில் நாம் நீஞ்சிடவே - தில்லுமுல்லுத்தனம் சாஞ்சிடவே
நம்மையே நாமே யடகுவச்ச - நாசத்தனமெல்லா மோஞ்சிடவே
பொம்மலாட்டத்திலே சிக்கியதோர் - பொம்மை யானநெலெ மாஞ்சிடவே
தெய்வக் கருணையி னாற்பூமித் - தேவி செய்திட்ட தவப்பயனால்
பொய்மையின் தீவினை யாலுண்மைப் - போதம் படைத்திடும் புண்ணியத்தால்
முட்டிரு ளமா வாசையன்று - மூண்டு மொளச்ச முளுமதிபோல்
எட்டெட்டு நாள்பனி மூட்டத்திலே - எளுந்த சூரியச் சோதியெப் போல்
சூர பன்மாவைத் தொலைச்சிடவே - சுப்பிரமண்யர் பிறந்ததுபோல்
ராவணன் தீமை யளிச்சிடவே - ராம னவதாரஞ் செஞ்சதுபோல்
பஞ்சவர் வென்று களிச்சிடவே - பாரதம் வாள்ந்து செளிச்சிடவே
கஞ்சன் கொடுமை யொளிச்சிடவே- கண்ணபிரானிங்கு வந்ததென
வெத்துச் சடங்குகளுஞ்சாதிப் - பித்தமும் தீர்ந்து பிளச்கிடவே
புத்த ரெனும் பெருமா னன்பின் - போதஞ்செளிக்கப் பிறந்தது போல்
காந்தி வற்றும் நிலத்தினிலே - கார்மொகில்வந்து பொளிஞ்சது போல்
காந்தி யுலகினுக்கென்னும்படி - காந்திமஹானும்பிறந்துவிட்டார்
காந்தி என்றிடுங் காலையிலே - கவின் பிறந்திடும் வேளையிலே
காந்தி யென்றிடும் பேச்சினிலே - சாந்தி பிறந்திடும் மூச்சினிலே
காந்தி யென்னும் பெயரிலுள்ளச் - சாந்தி பிறக்கும் துயரமில்லே
காந்தி மக்களுளங் கவரும் - காந்த மிதிற் சந்தேகமில்லே
திக்குத் தெரியாத காட்டினிலே - திடீர் மின்ன லடிச்சதுபோல்
எக்கரிட்டாடும் கடல் நடுவே - எதிரிலே கரைதோன்றுதல்போல்
ஏதுஞ் செய வளிகாணாதே - ஏங்கி யிருக்கும் நெலெயினிலே
தீதிலா வுண்மை நெறியொன்று - செப்பி விட்டாரெங்கள் காந்தி மகான்
சீரா நெறியின் செறப்பினையே - தேசங்க ளெங்குமே கண்டதில்லே
தீராத துன்பம் துயரமெல்லாம் - வேரோ டறுக்கும் வியப்பிதுவே
ஆயுத மில்லாத நம்மவர்க்கோ - ராயுதம் தந்தாரே காந்திமகான்
தீயினில் வாட்டித் தினந்தட்டிச் - செய்ததோ ராயுதந்தானல்ல

வல் விரும்பினால் செய்ததல்ல - வாங்கிக் கையில் பிடிப்பதல்ல
மல்லுக் கட்டியே கொல்வதல்ல - மனத்தைக் கட்டிப் பிடிப்பதது
கத்தி கபடாக்களேதுமில்லே - வத்திப் பீரங்கிகள் தானுமில்லே
சத்தியமென்னும் கணை தொடுத்த - சாந்தவில்லினைத் தூக்கிப்
புட்டார்

துராத்மாக்கள் தொலஞ்சிடவே - மகாத்மா தந்த சக்தியது
காரா வாயிற் கரிகாக்க - கண்ணன் அருள்செய்யும் காட்சியது
மெய்யி லணியுங் கவசமல்ல - வெம்படை தாக்கும் கவசமல்ல
உய்யு மகிம்ஸை யெனுமுண்மை - யுயிர்க் கவச மளித்துவிட்டார்
அன்று துரோபதை யம்மனையே - மன்றிடைக் காத்திடுங்கண்ண
னைப்போல்
இன்றுஞ் சுழல்ராட்டைச் சக்கரத்தால் - இந்தியாவைக் காத்து
நின்றாரே
ஒத்துமை யத்தசலானுக்கே - ஒத்தூதி நின்றது போதுமினி
ஒத்துமை யாக நாமெல்லோரும் - ஒத்துழை யாமையாம் போர்
தொடுப்போம்
முப்பத்து முக்கோடி மக்களொன்றாய் - முரண்டிக் கொள்ள
மொனஞ்சிவிட்டால்
சொற்ப மான வெள்ளெக்காரரிங்கே - எப்படி ராஜாங்கஞ் செஞ்சிடு
வார் ?
சர்க்கா ரிருப்பதும் நம்மாலே - சர்க்கார் நடப்பதும் நம்மாலே
சர்க்காரில் நாமில்லையானாலே - சர்க்கார் நடக்குமோபின்னாலே
அன்பா லெதிரியை யாச்சிகொண்டால் - அவன் படைப்பல
மென்னசெய்யும் ?
துன்பத்தினூடே துணிஞ்சி நின்றால் - துன்பம் வந்துநம்மெ என்ன
செய்யும் ?

ஒத்துழையாமைப் போர் **[தேசிங்குராஜன் மெட்டு]**

என்ற மகாத்மா சொற்படி இந்திய ரெளுந்து நின்றாரே
கொன்றாலுந்தம் கொள்கைவிடோமெனக் குதித்துவந்தாரே
வெள்ளெக்காரன் பள்ளியில் நாங்க வித்தெபடிக்கமாட்டோம்
கொள்ளெக்காரன் ஆச்சியிற் சும்மாக் குந்தியிருக்கமாட்டோம்
கள்ளெக்குடிச்சிப் புள்ளெகுட்டிகளேக் கலகஞ்செய்யமாட்டோம்
குள்ளநரியெப்போல் குறும்புங்க செஞ்சி குடிகெடுக்கமாட்டோம்
இந்துக்கள்முஸலீம் யாவருமொன்றே இந்தியத்தாய்மக்கள்
வந்தேமாதர மல்லாவென்றே வாழ்த்தி வணங்கிடுவோம்
சாதிச்சண்டெ சமயச்சண்டெ சாத்திர மாசாரப்
பேதச்சண்டெ யாவுமொளித்த நீதச்சண்டையிது

பாப்பான் பறையன் யாவருமொன்றே பாரததேசத்தில்
நேர்ப்பாப் பெண்களு மாண்களுமிங்கே நேர்மையினால்சமனாம்
தீண்டாமையை வேரோடே புடுங்கித் தீக்கிரையாக்கிடுவோம்
ஆண்டவனுக்கே யடிமையல்லாதே யார்க்குமடிமை செய்யோம்
வெள்ளெங்காரன் துணியெ நெருப்பில் வீசிஎறிஞ்சிடுவோம்
உள்ளூர்க்கதரெக் கட்டிமக்களுக் கொகந்தநெச் செஞ்சிடுவோம்
பட்டெபட்டெயாம் வெள்ளெக் கொடிக்கு பயந்து பணியமாட்டோம்
திட்டமான மூவர்ணக் கொடியெத் தெனந்தெனமும் பணிவோம்
வானம்பொளிய வளரும் வயலுக்கு வரிகொடுக்க மாட்டோம்
சேனெப்படைகள் வந்தாலுந்தான் சிறுது மஞ்சமாட்டோம்
முப்புரத்திலும் கடலிருக்குது உப்புவெளையுஞ் சும்மா
உப்புக்கு வரியெப் போட்டால் நாங்க ஒத்துக்கொள்ளமாட்டோம்
என்ற சத்தியா க்ரகப் போராட்டம் எங்கும் பரவிச்சு
நின்று நின்றுபின் நிமுந்து நிமுந்து நெடுக நடந்திச்சு
வெந்திறல் வெள்ளைய னுள்ளமுமங்கே வெந்து புளுங்கிச்சு
குன்றென ஒசந்த தோளுங்குன்னிக் குனிந்து கொமஞ்சிச்சு
மொடக்கடிக்குத்தடம் நடப்பவன்மேலென மொடக்குவாதம்
செஞ்சான்
அடக்கிடுமொறையா லடக்குவமென்றே யாங்காரங்கொண்டான்
தடியடிதர்பா ரானது போலீஸ் தாண்டவமாடிச்சு
கடியதோர் குண்டுகள் வெடிவெடிச்சுமே காலனெக் கூவிச்சு
கண்ணீர்ப்பொகெயால் பொதுக்கூட்டங்கள் கலஞ்சிடலாயிச்சு
துண்ணெனக் குதெரெச் சாட்டையுங் கொளம்பும் தொவச்சிட
லாயிச்சு
கன்னியர் மானங் கப்பலேற்றவே கலகம் செஞ்சிச்சு
சின்னஞ் சிறுசுகள் வானரப்பெடெயுந் திக்குமுக்காடிச்சு
பஞ்சாப்படுகொலெப் ப்ளியெத்திர்க்கப் பாடுகள் பட்டாங்க
அஞ்சாமற்றான் காந்தி சொற்படியே அடலுடன் நின்னாங்க

உலக யுத்தம் [கண்ணிகள்

இந்த நிலையினிலே இரண்டாவது யுத்தம்
வந்ததுவுந் தேசமெல்லாம் வரிஞ்சிகொண்டு நின்னதுவும்
மேற்கிலே சர்மனியுங் கிளக்கிலே சப்பானும்
தாக்கவரப் பூலோகம் தடுமாறி நின்னதுவும்
இந்தியரைக் கேளாமல் இங்க்லீஸு ராஜாங்கம்
இந்தியாவை ஹிட்லருக்கு எதிரியாச் செஞ்சதுவும்
ஜப்பா னுடன் சேந்து தாய் நாட்டெக் காப்பதெனச்
சிப்பாயிச் சிங்கம் போஸ் திரண்டபடெ சேத்ததுவும்

ஜப்பானுடன் போரில் நம்மெத் தவிக்கவிட்டு
குப்பாய வெள்ளையர்கள் தப்பித்துக் கொண்டதுவும்
போருக்கென்றே நாட்டின் சீரெக் கொலச்சிடவே
பாருக்கு ளில்லாத பஞ்சமிங்கு வந்ததுவும்
பொன்னான நம்நாடு பொலம்பித் தவிக்கையிலே
சின்னத் தனசின்னா தில்லுமுல்லு செஞ்சதுவும்

வெளியேறு கோஷம்

கண்டுவிட்டார் காந்திமகான் கருத்தில் முடிவானவளி
கொண்டுவிட்டாரதைப்பத்திக் குறிப்பு மெளுதிப்புட்டார்
வெள்ளைக் காராயின்றே வெளியேறிப் போபோபோ
கொள்ளைக் காராயின்றே குடியேறிப் போபோபோ
சள்ளைக் காராயின்னே சட்டுன்னு போவென்னத்
துள்ளித் துடிச்செளுந்த சொற்பாணம் விட்டதுவும்
காங்கிரஸுக் காரரையே கடுஞ்சிறையி லிட்டதுவும்
ஓங்கி வளர்ந்த யுத்தம் உடனடியாத் தீந்ததுவும்
சர்ச்சிலைப் பிரிட்டிஷ்ஷார் தள்ளித் தொழிற்கட்சி
சர்க்காரை ஏற்படுத்தச் சர்க்கார் தயவுவெச்சி
உங்களுக்குச் சொயராஜ்ய முடனே தரோமென்னு
மங்கலச் சொல் லால் தலைவர் மனங்குளிரச் செஞ்சதுவும்
வெஞ்சிறையிற் பட்டவர்கள் விடுதலையாய் வெளிவந்தார்
கொஞ்சும் வெள்ளக்காரனுடன் குடியாட்சி பேரமிட்டார்
வெண்ணெய் திரண்டுவரும் வேளையிலே தாளியது
துண்ணென் றுடைந்தாப்போல் துண்டுபட்டு போனதுபோல்
திண்டுமுண்டுக் காரன் சின்னாத் தெகிடுதத் தாலிந்த
அண்டர்புகழ் பாரதந்தான் ரெண்டு துண்டாய்ப் போனதுவும்
ஹிந்துஸ்தான் பாக்கிஸ்தான் இந்து முஸ்லீம் சண்டையினால்
வெந்து புளுங்கி ரத்த வெறிக்களமாய் மாறியதும்
போனதெல்லாம் போகட்டும் புதுமையாம் விடுதலைதான்
ஆனதது போதுமென அருந்தலைவர் கூடியதும்

சுதந்திர உதயம்

ஆயிரத்தொள் ளாயிரத்தி லான நாப்பத் தேழாண்டில்
தாய்நாடு சுதந்திரத்தெத் தளுவிக் களிச்சதுவும்
அறிஞ ரெலாங்கூடி யானசட்ட திட்டங்கள்
விரிவாய் வகுத்ததுவும் விடுதலைக்கால் நாட்டியதும்
எங்கோமான் நேரு எமக்கெல்லாம் தலையாக
சிங்கநிகர் வல்லபாய் தேசம் தெரட்டியதும்
அந்தோ ! கொடுநாளே ஐயன் மகாத்மாவை
சொந்தநம் மாளொருவன் சுட்டுத் தொலைச்சதுவும்
அஞ்சு வருஷத்தி னாச்சியிலே முன்னிருந்த
பஞ்சங் கொறையாமல் ப்ரதவித்து நின்றதுவும்
எல்லா மறிவோமே இன்றுள்ள நிலைதனைச்
சொல்லவெனில் நாக்குத் துவண்டு துடிக்குதையோ !

இத்தனைப் பாடுகள் பட்டுப் பட்டே நாம்
இங்கே சுதந்திரம் கொண்டு வந்தோம்
அத்தனைப் பாடும்பா ழாகிடவே யின்றோ
ராயிரங் கட்சிகள் தோணுதையா
காங்கிர ஸுக்குள் களேபர மாமின்னு
கட்சிமேல் கட்சி கிளைக்குதையா
தூங்குந் தொடையிற் கவுறு திரித்திடத்
தொள்ளாயிரங் கட்சி தோணுதையா
கம்மூ னிஸ்ட்டுசோஷ லிஸ்ட்டு முஸ்லிம் கட்சிக்
கம்மூன லிஸ்ட்டுத் தொளிலாளி
சும்மாக் கிடக்குஞ்சங் கூதிக் கெடுத்திடுஞ்
சோம்பே றியாண்டிகள் கூடிக்கிட்டார்
குடிப்ரஜைகளின் கட்சியின்னு சொல்லிக்
கொண்டதி லாயிரங் கோணங்களாம்
அடிப்படையெல்லா மொண்ணுதாஞ
மாஞ லாசையும் பாசமும் வேறுவேறும்
தங்க ளுக்குத் தாங்க ளே சாட்சியெனுந்
தான் தோன்றி க்கட்சியுந் தானிருக்கு
வங்கு பறிச்சி வளை பறிச்சிச்செந்நெல்
மணியெச்சேர்க்கும் வயலெலிபோல்
கட்சி யில்லாத கட்சிகளாஞ் சொந்தக்
கருத் தில்லாத கட்சிகளாம்
குட்சிக்குச் சோறு படைக்குங் க்ருஷிகளெக்
குத்தி விடுங்குரங் காட்டங்களாம்
வகுப்பு வாரியா மக்க ளெல் லாரையும்
வகுத்துக் கூறு குவிச்சி வச்சா
வகுப்புப் பேத மொளிஞ்சிடு மாமின்னு
வக்கணெ பேசிடுங் கட்சி களாம்
செந்தமிழ் நாட்டெப் பிரிக்கணமா மந்தத்
தெலுங்கர் நாட்டெ விரிக்கணமாம்
இந்த விதமாப் பிரிச்சிப் பிரிச்சித்தா
னிந்தியா யில்லையென் றுகணமாம்
வடக் குத்தியானும் தெக்குத்தி யானும்
வளமே பேசி வளக்குப் பண்ண
குடக் குத்தியானுங் குணக்குத் தியானும்
கொம்பேறி மூக்கராப் பாக்குறங்க

வெள்ளையன் சாப்புக் கடெக்காரன் நம்மெ
வேறு வேறாகப் பிரிச்சி வச்சிக்
கொள்ளை யடிக்க வகெ செஞ்சா னந்தக்
கொள்கையெ நாமும் புடிச்சிக் கிட்டோம்
ஒளக்குக் குள்ளஒற கிளக்கும் மேக்கும்
ஒசத்தித் தாத்தியும் பாப்பது ண்டோ
மூளைக்கு முன்னே மொளெயெக் கீறியே
முன்பின்னாப் பங்கு பிரிப்ப துண்டோ
சோத்துக்குப் பஞ்ச மானதுன்னு நாட்டெத்
துண்டு துண்டாகத் தொளை க்கறதா
ஆத்திரத் தாலே கண்டபடி யெல்லா
மாங்காரம் பேசிக் கொலேக் கறதா
சாதிச் சண்டைகள் போதாதா வீண்
சமயச் சண்டைகள் போதாதா
விதிச் சண்டைகள் போலச் சட்டசபை
வெறுமைச் சந்தைக ளாகணுமா
இந்துக்கள் தம்முள்ளே சண்டையிட் டேவந்த
இஸ்லாத் துக்கே யிடங்கொடுத்தார்
அந்தக் கதெயெ மறந்துப் புட்டோ மிப்போ
தாயிரம் பேதங்கள் பேசுகிறோம்
இந்துக்கள் முஸ்லிம்கள் சண்டையிட்டார் வந்த
இங்கிலீஸ்க்காரனெ யண்ட விட்டார்
முந்துங் கதெயெ மறந்துப்புட்டோ மிப்போ
முறண்டு பேசி முளிக்கறமே
பிச்சிப் புடுங்கிட லாம்நாலெ யொண்ணா
வச்சிப் பலவாக் கவுறுபின்ன
வச்சிரம் போல்வலு வாகுமையா யந்த
வண்ணமே ஒத்துமை வேணுமையா
சுள்ளிக் குச்சி யொடிச்சிட லாமானால்
சுள்ளிக்கட் டொடிக்க வாராது
உள்ளத்தி லொத்துமை கொண்டுவிட் டாலிந்த
உலகிற் கஷ்டங்கள் நேராது
பங்காளிச் சண்டைக ளின்றிருக்கும் நாளேப்
பளங் கதெயாகப் போவதுண்டு
கங்காளச் சோறு கொதிச்சிக்குதிச்சாலும்
கங்காளத் துக்குள்ளே நின்றுவிடும்
உள்ளூருச் சண்டைக் ளெத்தனே யானாலும்
ஓங்கி யொசந்துபின் னோஞ்சிவிடும்

கள்ளமாயன்னியன் வந்து கலந்திடல்
காலமுட்டுஞ்சண்டை தீராது
பிள்ளை குட்டிக் கலகமென் றலந்தப்
பேதம் சீக்கிரந் தீந்துவிடும்
கொள்ளை யசலானின் கூலிக் கிடந்தந்தா
லுள்ளதும் கொள்ளைக்கண் ணகிவிடும்
ஆம்பளெப் பொம்பளச் சண்டையெல் லாங்காத
லஞ்சாறு நாளுலே ஒத்துமையாம்
திம்புசெய் யன்னியின் சேந்துகொண்டால் சள்ளே
தீந்தாலுந் திம்பாய் முடிஞ்சிவிடும்
அமெரிக் காவெப் பாருங்கோ ருஷ்ய
ராச்சி மொறெயெக் கேளுங்கோ
நமது நாட்டெ மறந்திடுங் கோயென்னும்
நாசகாலக் கட்சி யாகாது
சொத்தை யாயினும் சொந்தக் கட்சிகள்
சோதரர்க் குள்ளே ஒடுங்கிவிடும்
வித்தை நெறைஞ்ச விந்தைக ளாயினும்
வேறு தேசக் கட்சி யாகாது
நமக்குள் சண்டைகள் நமக்கு ளன்னியன்
நட்ட நடுவே புகுந்திடலேன்
நமக்கு நல்லதெச் செய்யுறோ மின்னிட்டு
டிமிக்கி கொடுக்க வந்ததுவே

கம்முனித் தெம்மாங்கு

கம்முனிஸமாய் கண்ண ருவிக்கட்சிக்
கருத்தெல்லாம் ருஸ்யாக் காரனிடம்
பொம்மலாட்டத்தில் போலச் சனங்களெ
பொது வுடமையாச் செய்யணமாம்
சொந்த சொத்துச் சுதந்திரம் போலவே
சொந்த மூளையும் போகணமாம்
அந்த ருஷிய ராட்சி மொறெயினெ
யம்புட்டுங் காப்பி யடிக்கணமாம்
பாட்டாளி மக்களெக் காக்க வந்தோமெனப்
பாட்டுக்கள் பாடிப் பஜெனெ செஞ்சிக்
கூட்டாளி ருஷியாக் காரனெக் கூடுன்னு
கொளா யடிப்பவன் கம்முனி

அவன் கொடியெப் புடிச்சிக்கிட் டெப்போது
மவன் புகளெப் படிச்சிக்கிட்டு
அவனுக் காளெப் புடிச்சிக் கிட்டுவரு
மஞ்சாம் படெக்காரன் கம்மூனி
சொமெயெ யெறக்க வந்தோமர சாச்சிச்
சொமெயெத் தாங்க ளென்னுசொல்லி
சமயத் துக்குத் தக்கபடி வேசந்
தானணிஞ் சாடுவாங் கம்மூனி
ஓடும் ரயிலெக் கவுத்திடுவான் வந்த
வுணவுப் பண்டங் கொலச்சிடுவான்
நாடு நகரம் பாடு பட்டால் கச்சி
நலம் பெறுமென்பான் கம்மூனி
காந்தி பிறந்த நாட்டினி லேயுளச்
சாந்தி பிறந்த வீட்டினிலே
கேந்தி புடிச்ச கூட்டினிலே யுள்ள
கோந்திக் குரங்குகளே கம்மூனி
சத்திய மென்பது பாசாங் காமுளச்
சாந்த மெல்லாம் பயங் காளித்தனம்
பத்துப் பலவிதஞ் செஞ்சி காண்போமொரு
புத்துலக மென்பான் கம்மூனி
நல்லதோர் காரியம் ருஷியாக் காரனெ
நம்புத லெம்பானே கம்மூனி
ஒடன் பொறந்ததோர் நோயதுவே நம்ம
ஒடம் புறிஞ்சி யுசிரெயுண்ணும்
ஒடம் புறந்துட னிருந் தசலானுக்
கொள வாளி யானுங் கம்மூனி
நண்டு வயிற்றில் பிறந்த குஞ்சேபெத்த
நண்டினைக் கொன்னு வளர்வதுபோல்
தொண்டு தொட்ட நம்மெ நாக ரிகத்தினைத்
தொலைக்க வேண்டுமுன் கம்மூனி
கடவு ளில்லை யென்னு தாங்களே
கடவு ளின்னு சொல்லிக்கிட்டு
அடம் புடிச்சுமே ருஷியாக் காரனுக்
கிடம் புடிக்கிறுன் கம்மூனி
பெத்ததாய்க் கிண்ணிப் பிச்சை யெடுக்கவே
பிள்ளெ கோதானஞ் செஞ்சதுபோல்

பெத்ததாய் நாடு வருத்த முறத்தானப்
பேச்சுகள் பேசுருன் கம்மூனி
ஆயிரம் பாடுகள் பட்டு விடுதலே
யாலயங் கட்டிவச் சோமிதிலோர்
பேயினே யேகுடி வச்சிவணங்கிடப்
பெருமெ பேசுருன் கம்மூனி
அள களகாகக் கட்டிவச்ச வீட்டி
லாமை யினேக் குடி வெக்கணமாம்
கொளு கொளுவென்னு கொளுத்த எலியின்
கூட்டத்தெக் கூவியளேக்கணமாம்
குள்ள நரித்தனஞ் செஞ்சிடுவானவன்
குத்திரங் கொளும் புரிஞ்சிடுவான்
கொள்ளெ யடிச்சிக் கொலேயுஞ் செய்வா னந்தக்
குண்டுணிக் காரனே கம்மூனி
ருசியாக் காரன் தேசத்துலே யெல்லாம்
ருசியா யிருக்கு தென்னு சொல்லிப்
பசியாக் கிடக்கு மேளேயிடம் பொம்மெப்
பளத்தெக் காட்டுருன் கம்மூனி
ருசியாக் காரன்தா னமரிக்க னேடே
ஞரட்டி யடிச்சா நமக்கென்ன
ருசியாக் காரனெக் கூடிகிட்டு நாம
லோட்டா போட லெதற்காக
உள்ளூர்த் தொல்லேயெத் தீக்க ருசியனுக்
கொளவு சொல்லுருன் கம்மூனி
பாட்டாளி மக்கள் விளிக்க வென்னு தேசம்
பஞ்சத்தில் வாடி வதங்கணமாம்
கூட்டாளி ருஷியாக் காரனுக் கப்போது
கூடாரம் போட்டுக் களிக்கணமாம்
தவளேகள் கூட்டம் கூடிப் பாம்புக்குத்
தாம்பூலம் வச்சி யளேப்பதுபோல்
துவளு மிந்தியா ருஷியாக் காரனெத்
தூக்கிக் கொண்டு குதிக்கணமாம்
என்னப் பலவகை யாகக் கம்மூனிஸ்டுகள்
எத்திப் புகள்ந்திடும் ருஷ்யாவில்
என்ன நடக்குதா மென்னு கேட்டாலந்த
எளவுக்க தெயுஞ் சொல்லுறமே

மார்க்கெனும் பெரியான் மார்க்கிஸமென்னும் மார்க்கம் கண்டானே
பார்க்கெலாமிதுவே வேர்ப்பொருளென்னப் பறை கொட்டி நின்றானே
பாட்டாளிமக்கள் படுந்துயரெல்லாம் பார்த்துவிட்டான் மார்க்ஸ்
தாட்டிகமாகப் பணக்காரன் வாளுஞ் சங்கதியும் பார்த்தான்
லச்சலச்சமாய் மக்களின் வேலையெ ராச்சஸ மெசின்செய்ய
நிச்சலுந் தொழி லாளர்தொல்லைகள் நீண்டு போதல் கண்டான்
உழுது விதைப்பவர் பற்பலர் பலனை யுண்பவரோ சிலராம்
தொழுது பிழைப்பவர் பற்பலரவரைச் சூது செய்வோர் சிலராம்
நெத்திவியர்வையது நெலத்தில் விழவே நெரிபவர் பற்பலராம்
முத்திய சோம்பல் முறித்துமே சும்மா முடங்குவோர் சிற்சிலராம்
இதற்கொரு வழிதா னியற்றுவனென்றே யிதயமுருகினனே
அதற்கொரு வழிதான் கண்டான் மார்க்கிஸ மான நெறிதானய்யா
சரித்திரமெல்லாம் பொருளாதாரத் தத்துவமென்றானே
பிரித்துளதெல்லாஞ் சமனுறற்பின் பிழையில்லையென்றானே
இல்லாதவருடை யாரென மக்களை யிரண்டாப் பிரிச்சானே
இல்லாதவ ருடை யார்களை யொருநாள் எதிருவரென்றானே
இல்லாதவ ருடையாரெனப் பேதம் இல்லா வகைசெய்வேன்
எல்லா மக்களும் ஒன்றாய் வாழ்ந்திடு மேற்றங்காண்பேனே
ஏழைகளென்று மடிமைகளென்றும் ஏலாவகை செய்வேன்
கோழைகளென்றுங் கொடியவரென்றுங் கூடாவகை செய்வேன்
யாவருக்கும் பொதுவாக வுலகிலோ ராட்சிவரச் செய்வேன்
மேவிநிற்கும் பொருளெல்லாம் பொதுவென மேன்மை வரச் செய்வேன்

ஜார் ஆட்சி

என்ற மார்க்கி னெறி யெல்லாங் கேட்டா னெழுந்தான் லெனினென்பான்
நன்று நன்றிதனை ருஷியநாட்டிலே நாட்டுவனென்றானே
அந்தக்காலம் ருஷிய நாட்டிலே அடம் பிடிச்சான் ஜார்மன்னன்
சொந்தச் சொகத்துக்காக மக்களின் துரிசெயலிச்சான் ஜார் மன்னன்

ருஷியா வெங்கணும் ரோதனமாக லூட்டியடிச்சான் ஜார்மன்னன்
பசியால் வாடிய மக்களெல்லோரையும் பட்டினிபோட்டான் ஜார் மன்னன்
பஞ்சத்தாலே வாடிய மக்களைப் பாஞ்சி பறிச்சான் ஜார்மன்னன்
மிஞ்சினால் போலீஸ் காரனெக்கொண்டு வேட்டையாடினான் ஜார் மன்னன்
ஏளைகளெல்லாம் வயிறெறிஞ்சிட ஏப்பம்விட்டான் ஜார்மன்னன்
கோளைகளெல்லாங் கும்பிடுபோடக் கொண்டாடிச்சான் ஜார் மன்னன்

[கட்டபொம்மு மெட்டு

எட்டடிக் குச்சு மில்லாமலே தான் - ஏளைகள் வாடி வதங்கிநிக்க
எட்டடுக்கு மாடி கட்டிக்கொண்டு - யிங்கே பணக்காரன் தானிளிக்க
கட்டக் கிளிஞ்ச கந்தையுமே - காணுமலேளெ கலங்கி நிக்க
பட்டுப்பட் டாடெ யணிஞ்சுகொண்டு - பகட்டிலே பணக்காரன் சொக்க
சட்டியி லொட்டும் பருக்கையுமே - தானின்றி ஏளைகள் தள்ளாட
எட்டெட்டு வகையாப் பச்சணங்கள்-எல்லாமுண்டு சிலரேப்பம்விட
முட்டிக்கால் தட்ட ஏளைகளும் - முக்கிமொனகி நடந்துசெல்ல
சட்டுப் புட்டென்ன மோட்டாரில் - தனவந்தர்களு மேறிச்செல்ல
ஊரி லேலேகளைத் தெரட்டி - உசிரெ வச்சி ஒடம்புரிச்சி
ஊரிலே யேலே யொளச்சபலன் - ஒத்தனே வுண்டு களிச்சிருக்க
வேலியே பயிரெ மேஞ்சதுபோல் - வேந்தன் குடிகளைக்காஞ்சிடவே
காலிகள் கூட்டம் தலையெடுக்கக் - கடுமைசெஞ்சானே ஜார்மன்னன்

லெனின் புரட்சி

இந்தக் கொடுமையைக் கண்ட லெனின் - எகிறிக் கோபத்துடனெழுந்தான்
வந்ததோர் மார்க்கின் நெறிப்படியே - மக்களைக் காக்க மொனஞ்சி விட்டான்
உழுது விதைப்பவர்க் கேகிலமாம் - உண்டு களிப்பவர்க் கில்லே யென்முன்
பொளுது முச்சூடு மொளேப்பவர்க்கே - பூமியெல்லாம் சொந்த மென்னுசொன்னன்
தூங்கு மூஞ்சிப் பணக்காரன் - தொப்பை யோடே மடியட்டும்
பாங்கிக ளெல்லாம் போகட்டும் - பாமர மக்கள் வாளட்டும்

என்று பலபலவாச் சொல்லி - ஏளேக தம்மெ யெளுப்பிவிட்டான்
தொன்று தொட்டுக் குனிஞ்சிருந்த - தோள்களெ யெல்லாம்
நிமுத்திப்புட்டான்
சந்தெக் கூட்டம் போலிருந்த - சனத்தின் கூட்டம் தங்களேயே
விந்தையான பொரச்சியினுல் - வீரக் கூட்டமாச் செஞ்சிப்புட்டான்
வெறுங்கை மொளம் போடாமல் - வெம்படைகளெச் சேத்துப்புட்
டான்
இறுங்குஞ் ஜாரி னரசாங்கம் - இறுக்குக் கொண்டது விறுக்கென்ன
அடக்கு மொறெயா லடக்கியடக்கி - யார்ப்பாட் டஞ்செஞ்சி
பாத்ததுவே
அடக்க அடக்கப் புரட்சிமெம்மேலு - மடங்காப் பிடாரியானதுவே
கொடிய சிறைக்கு மஞ்சாமல் - கொல்லுங் கொலேகளுக் கஞ்சாமல்
குடிகளின் படை மெம்மேலே - கூட்டங் கூட்டமாய் வந்ததுவே
எளுந்தபுரட்சி வீச்சினிலே - விளுந்தது ஜா ராட்சியெல்லாம்
களுந்துபோல மக்களுக்கே - கடுமெ செஞ்சவர் மாஞ்சிப்புட்டார்

ஸ்டேலின் எழுச்சி

கன்னிக்குத் தாலி கட்டையிலே - கணவன் மாண்டு மடிஞ்சதுபோல்
நன்னயம் வந்து பொங்கையிலே - நண்பன் லெனினும் படுத்து
விட்டான்
முடக்கு வாதம் பத்திலெனின் - முடங்கிக் கொண்ட போதினிலே
அடக்கமான லெனினுட்கள் - அர சாச்ஞி செய்யப் போட்டியிட்டார்
காரிய தரிசி யாம் ஸ்டேலின் - போரிலே தலேவ ளும்ட்ராட்கி
ஷரி லிருவரும் போட்டியிட - உள்ளே பகைத்தீ பொகஞ்சதுவே
வந்த மரணப் படுக்கையிலே - வாடி லெனினுங் கிடக்கையிலே
சொந்த ராஜாங்கத்தெ ஏற்படுத்த - சூச்சி புரிஞ்சானே ஸ்டேலின
வன்
உயிலில் ஸ்டேலினெ ஓட்டவென்னு - உத்தர விட்டு லெனின்
மடிஞ்சான்
உயில் படிச்சி மறச்சுப்புட்டான் - உத்தம ளுத்தன் னெக்
காட்டிக்கிட்டான்
ட்ராட்கி யென்னுந் தலெமகனெ - த்ராட்டுலே விட்டுத் தனிச்சிப்
புட்டான்
தாக்க வந்த தலேவர்களெத் - தாஜாப் பண்ணிக் கெலிச்சிக்கிட்டான்
தைல மிட்டு லெனின் தேகத்தெச் - சமாதி வச்சிக் கோயில்கட்டி
அய லில்லேத் தெய்வ மென்னுசொல்லி - ஐயன் பூசாரியா மாறிப்
புட்டான்

ஏறவிட் டேணி எகிறுதல்போல் - இவன் சொந்தக்கட்சிக் காரர்களெச்
சீறிச் சிறையிலே வச்சிக்கொலெ - செஞ்சு களிச்சானே ஸ்டேலின் தொரை
போலீசுக் காரன் படெபெருக்கிப் - பொன்னுன நாட்டெக் கிறுகிறுக்கி
காலித் தனஞ்செஞ்சி மக்களையே - கூலிக ளாக்கிக் கெடுத்துப் புட்டான்
படெப் பலத்தெப் பெருக்கிக்கிட்டான் - பாமரர் தம்மெ நொறுக்கிப் புட்டான்
திடு திடுக்கக் கொடுமெ செஞ்சித் - தேசத்தெ யாளுருன் ஸ்டேலின் தொரெ

[தேசிங்குராஜன் மெட்டு]

உளுபவனுக்கே நெலமெலாந்தந்தான் உத்தமனுகிய லெனினெம்மான்
உளுபவனுளட்டும் நெலமெல்லா மெமக்கே உரிமையாமென்னுன் ஸ்டேலின்தொரெ
கூட்டுறவென்னு மன்புச்சங்கிலி கொண்டுவாளச் சொன்னுன் லெனினே
கூட்டுப்பண்ணையி லடிமைகளாகக் குமைந்திடச் சொன்னுன் ஸ்டேலின்தொரெ
ஆயிரமாயிரம் பேர்களெவெட்டி யந்தப் பிணங்களின்மேலேதான்
பேயாம்ஜாரினும் பெரும்பேயாகப் பெருமெபடெச்சான் ஸ்டேலின் தொரெ
சொக்கட்டாருடினுன் பட்டம்பதவியெச் சூறெயாடினுன் மக்களையே
இக்கெட்டும்போலீஸ் படைகளெத்தூண்டித் திடுக்கிடச்செஞ்சான் ஸ்டேலின் தொரெ
வேட்டையாடியே மக்களெயெல்லாம் விருந்து கொடுத்தான் சேனைக்கே
நாட்டிலெங்கணும் யாவரும்பயந்து நடுங்கிடச்செஞ்சான் ஸ்டேலின் தொரெ
இம்மென்னுச் சிறெ வாசமாமங்கே ஏனென்னுச் சிறைவாசந்தான்
அம்மென்னுச் சிறெ வாசமாமங்கே ஆமென்னுச்சிறை வாசந்தான்
கொஞ்சங்குஷியா யிருந்தாப் போலீஸ்கொள்ளிக் கண்கள் பாஞ்சிடுமே
மிஞ்சச்செலவு செஞ்சாலுடனே வெஞ்சிறெவாசல் தொறந்திடுமே

அசலானோடே பேசினாலுடனே யங்கேபோலீஸ் வந்திடுமே
இசைகேடாக யெடறி விளுந்தா இரும்புக்கைகள் விலங்கிடுமே
முன்னுக்குப்போனாக் கடிக்குங்களுதெ பின்னுக்குப்போனா
லுதைக்கும்மே
ஒண்ணுக்கும் போகா திருப்பவர் தம்மெ ஒடுக்கி வேலையில்
முடக்கும்மே
சொந்தவூரைவிட் டோடச் சொல்லித்துரத்தி யடிக்குமோர்படையே
வந்தவூரிலே வேலைவாங்கியே வாட்டிவதைக்கு மோர்படையே
ஆட்டுமந்தைகள் போலமக்களை யதட்டிச்செல்லுமோர் படையே
கூட்டுப்பண்ணைக்கு ளோட்டியடிமையாப் பூட்டுப் போடுமோர்
படையே
கார்டு கவர்களைப் பிரிச்சிப் பாத்துமே கண்ணிவைக்குமோர்
படையே
வார்டுதோறுஞ்சென் றுளவறிஞ்சிட வச்சகொள்ளியாமோர்
படையே
பொய்யெத்திரியாத் திரிச்சிவஞ்சனெப் புரியெக் கவுருப்பின்னி
ஐயன்ஸ்டேலின் தேசத்தெக் கட்டி ஆச்சி செலுத்துகின்றானே
குடியாச்சியென்னு சொல்லிக்கிறாங்க குடிமக்க சபையுமிருக்கு
குடிமக்கசபைதான் ஸ்டேலினாச்சிக்குக் கும்பிடுபோடுங் கூட்டம்
கும்பிடு போடா விட்டால்போலீஸ் கும்கா கொடுக்குஞ்சிறைக்கே
கும்பிடுபோட்டால் பட்டம்பதவிக ளம்பிடலாமினித் தமக்கே
ப்ராவ்டாதானே பேயரசாங்கப் பத்திரிக்கைகளில் முதலாம்
ப்ராவ்டாவென்றா லுண்மையின்பேராம் ப்ராவ்டாவெல்லாம் புரடெ
க்ரோக்கடை லென்னுமோர் பத்திரிக்கையாம் கொடுமையிலது
போலில்லே
க்ரோக்கடைலென்றால் முதலையா மதுதான் குடிகளை
முதலோடுண்ணும்
இலக்கியகெஜட் டொண்ணிருக்குதா மதிலே இலக்கியம்
மருந்துக்குமில்லே
இலக்கியமெல்லாங் கம்மூனிசத்தின் எரிமலைப்ரசாரந்தானே
டாஸென்னுமொரு மோசச்செய்தித் தாபனமிருக்காமங்கே
டாஸின்டஸ்புஸ் தலையங்கங்கள் தானே ருஸியாவெங்கும்
நாடகந்தானே நடக்குதாமங்கே நாடகக்கதைகள் தானில்லே
நாடகமெல்லாம் கம்மூனிஸத்தின் நாடகமாடிய கூத்து
நாடகமென்றால் அகத்தினைநாடி நடித்திடும் நாடகமல்ல
நாடகம்புறத்துள சேதியைநடிக்காமல் நடத்திக் காட்டுதலாமே

சினிமாயிருக்கு சிங்காரம் சோகம் சிரிப்புக ளேதுமேயில்லே
சினிமாவெல்லாங் கம்மூனிசத்தின் சேதிகள் திரிக்குங்கதையே
கூத்துகளுண்டு கூத்துகளெல்லாங் கம்மூனிசத்தின் கூத்து
ஏத்திசையெல்லாம் ஸ்டேலின் கடவுளி னேத்திசெயல்லாதில்லே
கதையெலாங் கம்மூனிசத்தின் கதையே காவியமெல்லாமதுவே
துதியெலாம் ஸ்டேலின் துதியே பாடுந் தோத்திர மெல்லாமதுவே
தும்மினலங்கே கம்மூனிசத்தின் தும்மலாகவே தும்மும்
விம்மினலங்கே கம்மூனிசத்தின் விம்மலாகவே விம்மும்
கம்மூனிசந்தான் ஸ்டேலினுச்சிக்குக் கைகட்டி நிப்பதுதானே
கம்மூனிசந்தான் பயத்தினு லுள்ளங் கலங்கித் துடிப்பதுதானே
எங்கணும் ஸ்டேலின் மயமாம்வீதிக ளெங்கணும் ஸ்டேலின்
படமாம்
எங்கணும் ஸ்டேலின் புகளாம் வீடுக ளெங்கணும் ஸ்டேலின்பூஜெ
இப்படியாக ஸ்டேலினுச்சிதா னிருக்குது ருஷ்யாவெங்கும்
சொற்படிகேளா தவருக்கேதான் தூக்குஞ்சிறையும் தங்கும்
கடவுளில்லையாங் கம்மூனிஸத்தின் கடவுள் ஸ்டேலின்தானும்
உடல்பொருளாவி யெல்லாமவனுக் குடமையாக் கொடுத்திட
வேணும்
கன்னிக்குக் கணவன்-சொந்தமில்லையவன் கம்மூனிஸத்துக்குச்
சொந்தம்
அன்னைக்குப் பிள்ளை-சொந்தமில்லையவன் அரசாங்கத்தின்
சொத்து
மக்களுக்கெல்லாம் தந்தையாம் ஸ்டேலின் மாதருக்கெல்லா
மதுவே
குக்கலெப்போல் வாலெக் கொளச்சிக் கும்பிடுபோடணமவனெ
எதுத்தவர்க்கெல்லா மெமனும் ஸ்டேலின் ஏளெகட்டெல்லாஞ்
சனியன்
கொதித்துளம் பொங்கிக் குமெஞ்சாப்போலீஸ் கொட்டுமே
தேளைப்போல
பள்ளிக்கூடங்கள் பற்பலகட்டிப் படிப்புகள் சொல்லித்தாரான்
பள்ளிக்கூடத்துப் படிப்பு ஸ்டேலினெப் பாடிப் புகள்வது தானே
யந்திரக்கூடம் பற்பலகட்டி யங்கேநடக்குது வேலே
யந்திரம்போலே மக்களெயெல்லாம் ஆட்டுதாமதிகாரக் கோலே
குனிஞ்சாக்கொட்டும் நிமுந்தாக்கொட்டும் கொடுங்கோலாச்சியின்
சாட்டெ
தணிஞ்சாச்சிரிக்கும் துணிஞ்சாநெறிக்கும் சண்டப்ரசண்ட
வேட்டே

சின்னக் கொளங்கெதக்கித் தேவதெக் கதெயெச் செப்புறானந்த
வாத்தி
என்னெனக் கேட்டால் புராணப்புரடா இதுபோலில்லவே யில்லே
காலெயிலெழுந்து வோல்காநீரில் கால்மொகங் கழுவுறான்
ஸ்டேலின்
நீலமாளிகெ க்ரெம்லினுச்சியில் நின்னுபாக்குறான் ஸ்டேலின்
பொன்னாலான சுருட்டுக்குளாயில் பொகெபுடிக்கிறான் ஸ்டேலின்
மின்னலான புகையின் சுருள்தான் விண்ணாடெல்லாங் கவ்வும்
மதியினெச்சுத்தி வானவில்லென வட்டம்போடுங் கோட்டெ
அதிசயஸ்டேலின் புகைமண்டலந்தான் அதுகாக்குது நம்நாட்டெ
சின்னஞ்சிறுவர்கள் கண்டாலதனெச் சேவித்துக் கொள்வாங்க
பென்னம் பெரியவர் கண்டாலதனாற் பெருமெப் படுவாங்க
இப்படியே சிறு குளந்தைகளுடைய இதயங் கொல்கின்றான்
தப்படி வித்தைகள் காட்டி மக்களெத் தளையிடுறான் ஸ்டேலின்
இருந்தாப் போலீஸெழுந்தாப் போலீஸெங்கும் போலீசே
பருந்தாச் சுத்தி மக்களெக் கொத்தும் படையாம் போலீசெ
பிணந் தின்னும் போலீஸ் பேய்களுக்கெல்லாம் பெரும் பேயாம்
ஸ்டேலின்
கணங் கணங் கொட்டும் தேள்களுக் கெல்லாங் கடுந்தேளாம்
ஸ்டேலின்
வண்ணான் துறையடி மொசலெப் போல மனதிலே திக்கென்ன
அண்ணாஸ்டேலி னாச்சியில் மக்களடங்கிக் கிடக்காங்க
கொளவிதான் புழுவெக் கொத்திக் கொத்திக் கொளவியாச்
செஞ்சிடுமந்த
ஒளவுலே மக்களெ உருட்டிப் பொரட்டித்தன் னுடெமையாச்
செய்யுறான் ஸ்டேலின்
கவிராய னங்கே வாளுகிறான் போலீஸ் காரனு மங்கே வாளுகிறான்
புவிராயனான குடியானவந்தான் போதுக்கு மொளச்சி மாளுகிறான்
கம்மூனிஸத்துக் கட்சியிலுள்ள கவர்மெண்ட்காரன் வாளுகிறான்
இம் மாநிலத்தெ வளஞ்செய வந்த ஏளெ யுளைத்து மாளுகிறான்
போர் வீரனங்கே வாளுகிறான் வீண் புரடாக்காரனும் வாளுகிறான்
பார்வளஞ் செய்ய ஏரெப்பற்றிடும் பாட்டாளியங்கே தாளுகிறான்
தகிடுதத்தப் பார்லமெண்டிலே தலையாட்டிப் பொம்மெ
வாளுகிறான்
அகடவிகட மில்லா தொளைப்பெ யாள்பவனங்கே தாளுகிறான்
கைகாட்டி மரம்போல் ஸ்டேலின் வந்தாக் கையெக்கூப்புவோன்
வாளுகிறான்

பொய்யெக் காட்டி மெய்யெச் சொல்பவன் பொக்கெனச்
சிறையில் மாளுகிறான்
தொளுதுமிப்பவன் வாளுகிறான் கச்சிச் சோம்பேறித் தொண்ட
னும் வாளுகிறான்
உளுது வெதெப்பவன் மாளுகிறான் மெஸி னேட்டி யுளேப்பவன்
மாளுகிறான்
தொளிலாளர் சங்க மிருக்குதா மங்கே தொளிலாளர் நன்மைக்
காயல்ல
தொளிலாளர் தம்மெத் தொண்டுப் பட்டியில் தொறத்திப்
பூட்டுவதற்காக
கோளி வளத்தா முட்டையிற் பங்கு கொடுத்திடணஞ்
சர்க்காருக்கு
பாளெ வளத்தாப் பாளேயின் மதுவில் பங்குண்டாஞ் சர்க்காருக்கு
மாடு வளத்தா வெண்ணெயும் பாலும் மாட்டு மாமிஸ முந்தரணம்
ஆடு வளத்தா ஆட்டின் தோலில் அரசாச்சிக்கரெப்
பங்குண்டாம்
ஓண்ணரெச்சாணிலந் தன்னிலேயொத்தன் உருளெக்கிளங்கெ
வெதச்சாக்கா
ஒண்ணுக்கரையாச் சர்க்காருக்கவ் வுருளெக்கெளங்கில் பங்குண்டு
அஞ்சுபேர் பணக் காரரிருந்தா லஞ்சுக்கு ரெண்டு பளுதில்லே
அஞ்சுபேர் போட்டியி லடிமைக்குத்தா னதிகச் சம்பளம்
கிடைச்சிடலாம்
பத்துப்பேர் பணக் காரரிருந்தால் பத்துப்பேருங் கொடியவரா
ஒத்தனேயொத்தன் மிஞ்சிட வேளேக்கொதவி செஞ்சாலுஞ்
செஞ்சிடலாம்
பத்துப் பத்தாப் பணக்காரர்கள் பத்துப் பத்தாப் போட்டியிட
பத்தினவரைக்கும் லாபமாமின்னு பாட்டாளி மக்கள்
வாள்ந்திடலாம்
ஆயிரமாயிரம் பணக்கார ரென்னு லவர்களுக் கொத்துமெ
கெடையாது
நாயெனப் போட்டி யிடுவாரேளெ நடுவுலே லாபந் தட்டிடலாம்
வேலேக்குக் கூலி கொஞ்ச மென்றாலே வேலே நிறுத்தஞ்
செஞ்சிடலாம்
ஆலேக்குத் தலேவன் பயங்காளி யவனெ அதட்டிப் பணத்தைப்
பறிச்சிடலாம்
பணக்கார னொருவன் தானவன் கையில் படைப்பல மெல்லா
மிருந்தாக்கா

இணக்கமாய்ப் பாடு படுவதல்லாதே இணக்கம்பேச வளியுண்டோ
அடங்காப் பிடாரி யொருவனே யாயுத மதிகாரமெல்லா மவனுக்கே
அடங்கிக் கிடப்பதை யல்லா லடிமைக் கடம்பிடிக்கவும் வளி
யுண்டோ
சர்க்கார் சட்டந் தனக்குப் பயந்து தயவு காட்டலாம் பணக்காரர்
சர்க்காரே தான் பணக்காரனென்றால் தயவு தாச்சண்ய மேதங்கே
ஆளுட லும் பொரு ளாவியு மெல்லா மரசாங்கத்தின் சொத்தானா
ஆளுக்கங்கே யடிமையா யிருப்ப தல்லா துரிமை தானுண்டோ
வச்சாக்குடுமி செறச்சா மொட்டெ மன்னன் ஸ்டேலின் ராசாங்கம்
லுச்சாப் பசங்க ளோட்டி யடிக்க லொள்ளுப் பேசுது ராசாங்கம்
தந்தையுங் மகனுஞ் சண்டெப் பிடிக்கத் தார்க்குச்சிபோடுது
ராசாங்கம்
மந்தெமந்தெயா மக்களெச் சிறைக்குள் மடக்கிப்போடுது
ராசாங்கம்
ஒன்றுக்கூடி வேலை செஞ்சாலும் ஒத்துமெ யில்லே ருசியாவில்
அன்றுடந்தான் ரேஸனுக்காக அம்பிட்டுப் பேருமொளப்பாங்க
மூட்டையில் நெல்லிக் காய்போலொண்ணு முட்டிமுடங்கி
மக்களெலாம்
கூட்டுப் பண்ணையில் கூடினுமுள்ளக் கூட்டுறவென்பது
தானில்லே
ஒருவனை யொருவன் காட்டிக்கொடுப்பானெசந்ததோ ரடிமைப்
படியேற
ஒருவனையொருவன் போட்டி போடுவான் ஓட்டாண்டித்
தலைவ னாய் மாற
அன்பில்லாத ராசாங்கம் போலீஸ் அதிகாரத்தால் ராசாங்கம்
இன்பில்லாத ராசாங்கம் படெ எரிமலைக்கும் ராசாங்கம்
இந்த ராசாங்க மிங்கே வரணமெங்குறான் கம்மூனிக்காரன்
சொந்த நாட்டினெப் பொந்தகம் வெக்கத் துடிக்கிறான்
கம்மூனிக்காரன்

பாரதிக் கம்மூனிஸம்

தனியொரு வனுக்கே யுணவிலை யென்றால் ஜகத்தினையழிப்போ
மென்றே தான்
இனிய பாரதி யுரைத்த தீந்தமிழ் எங்கள தென்கிறான் கம்மூனி
இனியெவனுக்கும் உணவிலை யிங்கே எங்களினடிமைக ளில்லாட்டா
குனிந்து கும்பிடு போடணமென்னும் கொள்கை நடக்குது
ருஸ்யாவில்

எல்லாரு மோர்குல மெல்லாரு மோர்நிறை யெல்லாரு மிந்நாட்டு மன்னரெனச்
சொல்லால் முழக்கியே பாரதி கண்டது சுதந்திரமான சுகந்தானே
எல்லாரு மேழைக ளெல்லாரும் கோழைகள் எல்லாரு மடிமைக ளென்றேதான்
சொல்லால் முழக்கிடும் ஆட்சி நடக்குது தொல்லை மிகுந்திடும் ருஷ்யாவில்
ஆயிர முண்டிங்கு ஜாதிக ளாயினும் அன்னியனேன்வர வேண்டுமெனப்
பாயிர மானதோர் பண்பு மொழிந்தான் பாரதி யெங்கள் கவிக்கரசன்
ஆயிர முண்டிங்கு பேதங் களாகையால் அன்னியன் கட்சியை நாட்டிடுவோம்
பாயிர மானதோர் பண்பி தென்றுமே பறையடிக்கிறான் கம்மூனி
ஏழைக ளென்றும் அடிமைகளென்றும் எவருமில்லை யென்றான் கவிஞன்
தோழமை பேசி யடிமைக ளாக்கச் சூது புரிகிறான் கம்மூனி

கம்பன் கம்மூனிஸம்

கம்பன் சொன்னதுங் கம்மூனிஸமெனக் கதைக்கிறான் கம்மூனிக்காரன்
கம்பனுரைத்திடும் கம்மூனிஸமது கண்டால் கஷ்டமெலாந் தீரும்

[கண்ணிகள்

எல்லாருஞ் செல்வர்களாம் ஏழை பணக்காரரென்ப
தில்லையாங் கோசலத்தி லிது கம்பன் சொன்ன சுகம்
எல்லாரு மேழைகளா மேழை பணக் காரரென்ப
தில்லையாம் ருஷ்யாவி லிது ஸ்டேலின் கம்மூனிஸம்
கொள்வா ரில்லாமையினுல் கொடுப்பவரு மில்லையெனக்
கள்ளுறுஞ் செந்தமிழில் கம்பன் வகுத்தமுறை
கொள்ளுவது சர்க்காராம் கொடுப்பதெலாம் மக்களென்று
கொள்ளை யடிக்கும் ஸ்டேலின் கொடுங்கோல் முறையாகும்
மக்க ளுயிரென்றும் மன்ன னுடலென்றும்
மிக்கநெறி எங்கள் கவி வேந்த னுரைத்த நெறி
மக்களெல் லாமுடலாம் மன்ன னுடைமைகளாம்
மிக்கவுயிர் தாமென்ன மிரட்டுவது ஸ்டேலினிஸம்
கல்வி யிறைக்லையால் கருத்தாற் கனிவென்னும்
செல்வத் தால்வந்த சீர்கம்பன் செப்பியது

கொல்வினையாற் சிறையாற் கொடுமையாற் போலீஸின்
அல்வினையால் ஸ்டேலி னடக்குமுறை யாச்சியது
அன்பா லறத்தா லருளா லிதய மொன்றும்
இன்பாற் கனிந்ததன்றோ எழிலான கம்பனுரெ
துன்பாற் துடுக்காற் தொடை நடுக்கும் துயரத்தால்
வன்பால் வனைந்திட்ட மாசிறையாம் ஸ்டேலின் மொறெ
கம்பன் சொன்ன கம்மூனிசம் கலி தொலைக்கும் ஸ்டேலினெனும்
வம்பன் சொன்ன கம்மூனிசம் வகைமோசஞ் செஞ்சிடுமே

வள்ளுவன் கம்முனிஸம்

இரந்துதான் உயிர் வாழ்க்கை யென்றுலே யப்பிரமன்
பரந்து கெடுகவெனும் பண்புரைத்தான் வள்ளுவனே
அவன் மொழியைத் தங்கள்கட்சிக் காணிமொழி யாம்பெரிய
தவமொழியாச் சாற்றுகிருன் தகிடுதத்தக் கம்மூனி
அவன் பாடும் மன்னர்களி ஞச்சிமொறைண்ய மறைப்பார்
அவன் புகழும் நல்லறத்தி லன்புமொறை யையொளிப்பார்
பொருட் செல்வத் தோடுவரு மருட்செல்வப் போதமதை
இருட் செல்வ மாக்கவரான் எளவெடுத்த கம்மூனி
வாய்மையுடன் மெய்மை தூய்மை யுடனுண்மை
தாய்மை யரு ளென்றுனெம் தவத்துச்சி வள்ளுவனே
வாய்மையைப் பொய்யாக்கித் தூய்மையைச் சூதாக்கி
பேய்மையைத் தாயாக்கும் பெருமையே கம்மூனிஸம்

வேதக் கம்முனிஸம்

வேதகா லத்துமக்கள் விரும்பியதோர் கம்மூனிஸம்
நீதியா லன்புடைய நெறியால் நிறைந்ததது
காலியாம் ஸ்டேலின் கயவாளிக் கம்மூனிஸம்
தோலிருக்கச் சொளைமுழுங்குஞ் சூச்சியாந் தொல்லையிஸம்

அன்றும் இன்றும்

தங்க மெனுங்குணத்தான் எங்கள் மகாவீரச்
சிங்க மெனும் போசை யன்றைக்குச் சீயென்றுர்
இன்றவரைக் கொண்டாடி ஏற்றங்கள் பாடுகிறுர்
அன்றுடம் தான்மாறி யல்லாடுங் கம்மூனி
காந்தியுங் கம்மூனி காணென்ன வோர்சீடர்

தான்தோன்றி யாகவே தான் சாற்றுகிறு ரிப்போது
உண்மைக் குயிர்வாழ்ந்த உத்தமராம் காந்தியுரைப்
பொய்மைக் கம்யூனிஸத்தின் போக்கென்பா ரந்தந்தோ!
குடிசைத் தொழில்வாழக் குறையிரந்த தேவனைத்தான்
மடிபிடிக்கும் மெஷின்முறையில் மாட்டுகிறு ரையையோ
பந்தப் பலாத்காரக் கம்யூனிப் பாழ்பரவும்
அந்தநாள் கொடுநாளென் றைய னுரைத்தாராம்
அந்த மொழி மறைச்சி ஆங்காரம் பேசிக்கிட்டு
செங்தேனைச் சேற்றிலிட்டுச் சிரளிக்கப் பார்க்கின்றுர்
அன்றைக்கு முதலெதிரி யாயிருந்த காந்திமகான்
இன்றைக்கு முதல்நண்ப ரென்பதுதா னுச்சரியம்
ஓந்தி நிறம் மாறும் பாம்பும் உரிமாறும்
காந்திக் கம்யூனியுளங் கணங்கணமும் மாறிவரும்
சமயத்துக் கேற்றபடித் தான்வேசம் போட்டிடுவார்
குமையும் பலகச்சிகளாக் குதிச்சோடிப் பாஞ்சிடுவார்
நாடகத்தில் வேசமிட்டு நடிப்பதுபோல் அப்பப்போ
தேடும்பல வேசமிடும் தில்லுமுல்லே கம்யூனிஸம்
உருமாறி யொளவறிஞ்சி யுள்ளோந்தாம் படையாகக்
கருமாறிப் பசப்புவதே கம்யூனிஸத் தொளிலாம்
கம்யூனி யென்னுக்காக் கருணையாம் ஸ்டேலினுக்கு
கம்யூனிட் டிட்டோவெக் கண்டால் வெறுப்பேனே?
கம்யூனி யானாலும் காலில் உளுந் தாலன்றிக்
கம்யூனி ஸ்டேலினுக்குக் கருணை பொறக்காது
கம்யூனி தன்னுட்டெக் காலனியா ஸ்டேலினிடம்
சும்மாக் கொடுத்துவிட்டு சோதாவா நிக்கணமாம்
ஊட்டெ மறந்து பெத்த நாட்டை மறந்துலகப்
பாட்டாளி ருஸ்யாவின் பாதங் களுவணமாம்
ஸ்டேலின் தலைமையிலே ஸ்டேலினுக் காள் சேர்க்கும்
காலிக் கயமையதே கம்யூ னிஸமாகும்

ஆக்ரமிப்பாளர் யார்

அமெரிக்கா வும் பிரிட்டனு மாக்ரமிப்புக் காரர்களாம்
இமிரு புடிச்சவராஞ் செப்புகிறுன் கம்யூனி
இமிரு புடிச்சவங்க தேசமெலாம் விட்டுவிட்டு
அமரிக்கை யாத்தங்க ளலுவலுக்குச் சென்றுவிட்டார்
அடம்புடிச்சி நின்னுங்க அந்நியர்கள் நாட்டினிலே
இடங்கொண்ட விடுதலையின் திறவுகோல் தந்துவிட்டார்
இந்தியா பாகிஸ்தான் இந்தனேஸ் யாலங்கை
மூந்து பிலிப் பைன்பர்மா மோசேயூ ராமிஸ்ரேல்
இந்தஎழு நாடுகட்கு மின்பச் சுதந்திரந்தான்
தந்துவிட்டார் சோதரராய்த் தம்மோடு சேத்துக்கிட்டார்
அம்பத்தஞ்சு கோடிமக்க ளடிமைத் தளையறுத்தார்
அம்புவியி லாங்கிலரு மமரிக்க ருங்கூடி

திமிரு புடிச்சவங்க செய்த விந்த த்யாகந்தான்
நமுரு புடிச்ச ருஸ்ய நாட்டினர்கள் செய்யவில்லை
பொல்லாத ஹிட்லருடன் போலந்தைத் துண்டாடி
வல்லமையால் பால்டிக்கின் வளப்பஞ் செதெச்சாரே
ஆல்பேனி பல்கேரி ஹங்கேரி மங்கோலி
ருமேனி லாதவியா லுதுவேனி எஸ்டோனி
கிளக்கான ஜர்மனியில் கீள்வடக்கு ப்ரஸ்யாவில்
துளக்கான தன்னூவில் துளுப்பான பின்லாந்தில்
துப்பான செக்கோவில் சப்பான் துணுக்குகளில்
அப்பாடா ஸ்டேலி னதிகாரஞ் செல்லுறது
கொரியாவில் கம்மூனிக் கும்மாளம் போடுறது
சிரியாக் சிரிக்கிறது தேசஞ் செதைக்கிறது
போதாக் குறைக்குத்தான் பொன்னுன சீனாவும்
காதலுடன் ருஸ்யாவெக் கலந்து களிக்கிறது

சீனக் கம்மூனிஸம்

சீனத்தி லேபொரச்சிச் சீரெல்லாம் பாருன்னு
தினச் சனங்களிடஞ் செப்புகிறுன் கம்மூனி
எங்கள்கம் மூனிஸந்தா னிதுவே றெனமாசே
துங்க னுரெச்சமொளி சூதாச்சே சீனாவில்
வெற்றிக்கு முன்னாலே வேரும் பொதுவுடமை
வெற்றிக்குப் பின்ஸ்டேலின் விறலாச்சே சீனாவில்
அப்படியே ருஸ்யாவி னச்சினிலே ராசாங்கம்
ஒப்படியா யொத்திகையா யுருட்டுறது சீனாவில்
வாயடிச்சிக் கையடிச்சி மாசேதுங் காச்சிருஸ்யா
ஈயடிச்சான் காப்பியா யியங்குறது சீனாவில்
சட்டவிட்டம் பாராமல் சதியென்னு மக்களையே
கொட்டடியி லிட்ட கொலெக் கும்மாளஞ் சீனாவில்
தலைவெட்டித் தம்பிரான் தடியடிதர் பாரெங்கும்
நிலைகெட்ட கிர்த்தாளி நெரிக்கிறது சீனாவில்
உருசிகண்ட பூனையதே யுரியுரியாத் தாவிடுமாம்
உருசியா மொரெறகண்டே யுசுருசுராத் தாவுறது
நகர சபைகளெல்லாம் நாய்வேட்டெ யாடுதல்போல்
நகரத்துப் போலீசார் நத்தத்தெ வேட்டையிட்டார்
ஆள்வேட்டை யாடியடிமைகளை யச்சுறுத்தும்
கோள்வேட்டை யாம் ருஸ்யாக் கொடுமையாஞ் சீனாவில்
தயவில்லை தாச்சண்யந் தானில்லை யெனமாசே
நயமொளியெ விட்டிப்போ நச்சுமொளி கூறுகிறுன்
சீர்கெட்டுப் போனதொரு சீனாவெக் காக்கண்ணன்னு
மார்தட்டி வந்தவரே மடிதட்ட லாயிற்றெ
ஆனைப் பட்டவங்க ளடிமைகளாய்ப் போனுங்க
சீனாப் புகளெல்லாஞ் செல்லாப் பணந்தானே
செஞ்சினா நிக்கட்டும் செங்குருதி ருஸ்யாவின்
வஞ்சனை யினல்வந்த வகை மோசஞ்சொல்லுகிறேன்

அதற்கும் இதற்கும்

ஆக்கிரமிப் பாளரென் று அசலாரெப் பளிகூறி
ஆக்கிரமிப் பாலுலகெ யாளணமாம் ஸ்டேலினுக்கு
சொந்தநாட் டாச்சிகளெத் தொனுடப்பா னதற்குத்தான்
முந்தும் விடுதலைப்போர் முறையின்னு பேரிடுவான்
அம்பத்தஞ்சு கோடி மக்க ளடஞ்சார் விடுதலையை
வம்பரெனு மேக்குவெள்ளெ மக்க ளுதவியினுல்
அம்பத்தெட்டுக் கோடிமக்க ளடிமைகளாப் போனுர்கள்
நம்பகமாம் ருஸ்யாவால் நாசமுற்ரு ரையையோ
மேக்கத்தி வெள்ளையர்கள் மேலா னவருன்னுப்
பாக்குவெத் தலைவச்சிப் பாட்டுக்கள் பாடவில்லே
இங்கிலீஸ் காரனையு மேந்துமம ரிக்கனையும்
தங்கமின்னு சொல்லிக்கிட்டுத் தாஜாக்கள் பண்ணவில்லெ
வக்கா லத்துவாங்கி வக்கணைகள் பேசவில்லே
இக்காலத் திலுமவர்தம் எளவெல்லாம் நாமறிவோம்
ஆனுலும் ருஸ்யாவி னட்டுளி யத்தின்முன்
மேநாட்டா ரக்கிரமம் வெய்யிலிலே மின்மினியாம்
அஞ்சாம் படெவச்சி யசலூரர் பிடிக்கவரும்
வஞ்சகரே ருஸ்யாவின் மன்னரெனுங் கம்மூனி
கம்மூனி யோயிலையோ காசினியெல் லாந்தமக்கே
சம்மான மாச்சனங்க தானே தரணமெம்பார்

கம்மூனிச் சமாதானம்

சாந்த மெனச்சொல்லிச் சமாதானம் பேசுகிருர்
சாந்தமா யிருந்துருஸ்யாச் சதியைக்கொண் டாடணமாம்
சாந்தம் சமாதானச் சங்கதியெல் லாஞ்சதியாம்
ஏந்துங்கம் மூனிஸத்தி னகராதி யியம்புறது
மார்க்கிஸமும் லெனினிஸமும் மாண்டுவிழச் சமுதாயம்
ஏற்கும் சமாதான மென்ன முளங்குகிறது
மூன்ரு மகிலத்தின் முன்னுன தீர்மானம்
சான்ருகப் படைப்பலத்தால் உலகாட்சிச் சதியிடுது
ஒருநாட்டுக் கம்மூனிசம் உலகமெல்லாம் ஆவதற்கு
வருநெறிதான் போரென்ன வக்கணையாச் சொல்லுறது
வார்சா சமாதான மாநாட்டிலே நாம்பான்
ஆர்வமாப் புண்ணியப்போ ரனல்விசிக் களித்தாரே
ஆயிரத்தொள் ளாயிரத்தி யானஐம்ப தாமாண்டின்
பாயிரமாங் கம்மூனிச் சமாதானப் பள்ளியிலே
அணுகுண்டு வேண்டாமென் றதுகேட்ட தல்லாமல்
அடிதடிப்போ ராகாதென் றதுகேட்க வில்லையென்னே ?
பொய்யான கையெழுத்தைப் போட்டுயெண்ணெத் தான்பெருக்கி
மெய்யான சாந்தமென மிரட்டுகிறன் கம்மூனி
இரண்டா யிரத்தோடு எழுநூத்தி மூனுலக்ஷம்
திரண்டமக்கள் கையெழுத்துச் சேர்ந்ததாம் மாநாட்டில்

கையெழுத்துப் போடாதார் கயவாளி யாக்கருதி
நையப் படுவரென நடுக்கியது ப்ராவ்டாவே
ருஷியாஜோன் ஜெர்மனியில் சோந்துசுத்திக் கணக்கெடுத்தா
இசமான ஜனத்தொகைதான் இறையவரின் சொற்படியே
ஒருகோடி யெண்பதரை உள்ளார்கள் மக்களதில்
ஒருகோடி எளுபதரைக் கையெழுத்து மூண்டென்பார்
திட்டமிட்ட கணக்கின் சிரவிவெ யென்னென்பேன்
தொட்டிலிட்ட கொளந்தையுந்தான் தொடுத்ததோ கையெழுத்து?
கர்ப்பத்தி லேசிசுவுங் கையெழுத்துப் போட்டதுவோ
சொர்ப்பனமாய்ச் செத்தவரும் சுருக்கெழுத்துப் போட்டாரோ
தேர்தலிலே செத்தவங்க திரும்பி வருவதுபோல்
சார்புடனே வந்தவரே தான்திரும்பி வந்ததுபோல்
வலக்கை யெழுத்துடனே யிடக்கை யெழுத்தெனவே
இலக்கம் பெருக்கித்தா னியன்றதுவோ நாமறியோம்
இவ்வாருய் எங்கெங்கும் இலச்சலச்சங் கையெழுத்தாய்
செவ்வைச் சமாதானச் சிரிப்பாணி கொட்டுறது
பாசாங்கு வேசம் பசப்புப் படிறவைதான்
வீசியே உலகாச்சி விரும்புறது ருஸ்யாவே
சத்தியத்தைச் சாந்தத்தைச் சமாதியி லேதள்ளி
குத்திரத்தைக் கோஸேக் கொண்டா டுதுருஸ்யா
இந்தச் சமாதானத் தேமாந்து போனுக்கா
வந்துவிடு மாபத்து வகைமோச மாயிடுமே
கம்யூனி யகராதிக் கட்டுப் படிச்சாந்தம்
சம்மாதா னம்மென்ருல் சண்டெ யெனப்பொருளாம்
ஐயப்பிர காசுரைக்கும் ஐயமொளியைக் கேட்டிடுவீர்
நயமான ராஜாஜீ நயமொளியெக் கேட்டிடுவீர்

நம்மூர்க் கம்யூனி

நம்மூருக் கம்யூனி நாளெல்லாம் ருஸ்யாவெத்
தம்பூராச் சொல்லிக்கிட்டுத் தாளங்கொட்டி யாடுகிருன்
குதிரெக்கொம் பானபல கோளுரைக ளெக்கூறி
சதிரிட்டு நம்மவரெச் சதி செய்வான் கம்யூனி
இக்கரைக்கே யக்கரையி லிருக்குதாம் பச்செயெல்லாம்
அக்கரைக்கே யிக்கரையி லீனத்துமே கொச்செயென்பான்
ருசியாவெப் பாருமெம்பான் ருசியா யிருக்குதெம்பான்
பசியாறு மென்னு சொல்லிப் பளத்தோலெக் காட்டிடுவான்
இக்கரையு மக்கரையும் எக்கரையுந் தான்கூடி
ஒக்கு மொருகரையா யோடணமாம் ஸ்டேலினிடம்
அக்கரை யில்லாதவங்க அடங்காப் பிடாரிகளாம்
குக்கலெப்போ லேகொலேக்கும் குள்ளநரிக் கம்யூனி
இக்கரெயெத் தாண்டிக்கிட்டா யிருக்குதாஞ் சக்கரையே
அக்கரைக்கே போங்களின்னு அவுட்டுப்பாஸ் தந்திடுவோம்
உண்ணுடிப் பாத்தாக்கா உண்மெ புரிஞ்சிடுமே
கண்ணுடிக் கோணல் தருங் காச்சியுண்மை யாயிடுமோ?

பீத்தக் கண்ணாடியிலெ பெத்தநாட் டெப்பாப்பான்
மாத்துக் கண்ணாடியிலே மத்தநாட் டெப்பாப்பான்
காமாலெக் கண்ணனுக்குக் கண்டதெல்லாஞ் சோகெ
மாமாலெக் கண்ணனுக்கு மங்கலாம் பார்வெயெல்லாம்
கம்மூனிக் கண்ணெல்லாங் காமாலெக் கண்ணதிலே
கம்மூனி யல்லாமல் காச்சியொண்ணுந் தோணாது
பொங்கிப் புளிச்சகண்ணும் புதுமெயொண்ணுந் தோணாது
வெங்கிப் பொகஞ்சகண்ணும் வெறுப்பாகும் பார்வையெல்லாம்
வங்குபறிச்ச கண்ணும் வளமெயொண்ணுந் தோணாது
நுங்குசொளை சிவிவச்ச நொள்ளெக்கண் ணாகாது
கொள்ளிக்கண் கம்மூனிக் கொடும்பார்வெ யாகாது
உள்ளிக்கண் ணீர்கண்டெ உருகிவிடக் கூடாது
கம்மூனிக் கண்ணாடிக் கருப்பான கண்ணாடி
கண்ணெ மறச்சி நம்மெக் களவு கொள்ளுங் கண்ணாடி
கம்மூனி ருஷ்யாவின் கண்ணாடி மாட்டிக்கிட்டா
கண்ணவிஞ்சி போயிடுமே கருத்து மளிஞ்சிடுமே
பூதக் கண்ணாடியெனப் பொத்தகங்க ளெக்காட்டி
வேதக் கண்ணாடியதன் விளக்கவிக்கப் பாக்கின்றான்
கம்மூனிக் காமாலெக் கண்ணாச்சி கூடாது
கம்மூனி மாலெக்கண் காச்சிவர லாகாது
தெள்ளத் தெளிஞ்சிட்ட தேசத் திருக்கண்கள்
கள்ளக் கண்ணாடிகளால் நொள்ளைக்கண் ணாகிடவோ?
கம்மூனிப் பேச்சென்னும் கண்ணாடி போட்டாக்கா
நம்மோட பார்வையெலாம் நஞ்சூறிப் போயிடுமே
ஆட்டு விளிபோலே யசட்டுவிளி யாயிடுமே
மோட்டாங்கெதக் கண்போலே மொண்ணைவிளி யாயிடுமே
ஓந்திக் கண்போல ஒசர முளிச்சிடுமே
கோந்தித் தேவாங்கென்னக் கேந்தி புடிச்சிடுமே
எந்தக்காச்சி யானாலு மிந்தக் காச்சி யாகாது
சொந்தக்காச்சி யாயிரந்தான் சூதுக்காச்சி யாகாது
ஆயிரமாங் கச்சிகளே யானாலு மன்னியன்கை
நாயென்ன நக்குங் கச்சி நமக்குள்ளே கூடாது
வயலெலியின் வங்குகளால் வரப்புவச்ச பண்ணையென
அயல்வளைக்குள் நம்மையெல்லா மடைக்கவரான் கம்மூனி
வெல்லத்தெ வெச்செறும்பெ விருந்துண்ணக் கூப்பிடல்போல்
அல்லல்தரும் வேத்தாளெ யலைக்கிறான் கம்மூனி
காவியத்தெக் கட்டிவச்சிக் கரையானெக் கூப்பிடல்போல்
தேவிஎங்கள் தாய்நாட்டின் சீரளிப்பான் கம்மூனி
சுத்துமுத்துங் கம்மூனிச் சூச்சி நடக்கிறது
பெத்த நாட் டிலேயஞ்சாம் பெரியபடெ நிக்குறது
அவன்கொடியெ யிந்நாட்டி லண்டவிடக் கூடாது
அவனடிமை யாட்கள்செயு மார்ப்பாட்டங் கூடாது
பாட்டாளி மக்களவன் பசப்புமொழி யெக்கேட்டுக்
கூட்டாளி யாச்சேர்ந்து கொடுமெப்பட லாகாது

தொளிலாளி மக்களெலாஞ் சூதுமொளி யெக்கேட்டு
விளலாகி வெறுமையா வீணாக லாகாது
உளெப்பாளி மக்களெல்லாம் உருட்டாலை யேகேட்டு
பொளப்பு கெட்டுச் சும்மாப் பொலம்புவது கூடாது
குடியானவ னவன்சொல் குறும்புமொளி யெக்கேட்டு
அடியோ டடிமைகளா யல்லாட லாகாது
காசுபண மில்லாமல் கட்டாய வேலையிலே
மாசுபட நம்வாழ்க்கெ மாண்டுவிட லாகாது

கம்யூனிக் கயமை

சீனாவின் செம்படைதான் இப்பேத்தி லேயிருக்கு
மானமத்த கம்யூனி வரவேக்கக் காத்திருக்கான்
கிளக்கிலே சீனாவின் கிறுக்குத் தனமிருக்கு
மேக்கிலே ருஸ்யாவின் மிடுக்குத் தனமிருக்கு
கிடுக்கியிட்டு நம்நாட்டெக் கிறுக்கி விடணுன்னு
முடுக்கி மொளங்குகிறான் முரடான கம்யூனி
தேசத் துரோகிகளாம் தெய்வத் துரோகிகளாம்
மோசத் துக்கெல்லாம் முதல்வெத் தலெக்காரர்
மண்டெ புளுத்தவங்க மதம்புடிச்ச ராச்சசங்க
ரெண்டுங்கெட்ட ரெகளைக்கி ரெடியாக நிப்பவங்க
ஆசை மொளி பேசு மண்டப் புரட்டங்க
நாச மொளி பேசும் நாக்கொள்ளி வாயங்க
கொல்லுங் கொலைக்கஞ்சாக் கொம்பேறி மூக்கங்க
பொல்லாத வம்பங்க பொச்சாப்புக் காரங்க
குத்திரமுங் கோளுங் குள்ள நரிக்குறும்பும்
வத்திவச்சிப் பேசும் வாச்சாங் கொளிப்பசங்க
கொள்ளை யடிப்பாங்க குந்தாணி வேரென்ன
குள்ளெக் குதிரெக்குக் கொம்பு மொளச்சதென
பொய்யே வெளைப்பாங்க புளுகெத் திரிப்பாங்க
நையப் புடெப்பாங்க நாட்டெக் கெடுப்பாங்க
பதுங்கி யிருப்பாங்க பாஞ்சி வருவாங்க
ஒதுங்கி யிருப்பாங்க ஒளவறிஞ்சி கொள்வாங்க
கொஞ்சம்பணக் காரரெனில் குடுமி பிடிப்பாங்க
மிஞ்சும்பணக் காரரின்முன் மினுக்கி யரிப்பாங்க
ஏளைகளைத் தட்டிவிட்டே எகிறிக் குதிப்பாங்க
வாளுமனைக் கூரையிற்தி வத்திவச்சிப் பாப்பாங்க
ரவுலெக் கவுப்பாங்க ரவுசுபண்ணி நிப்பாங்க
கவுறு திரிப்பாங்கக் கண்ணெத் தொடப்பாங்க
ஊரெக் கெடுப்பாங்க ஊட்டெ முறிப்பாங்க
சோரத் தனஞ்செஞ்சி சொகத்தெக் கெடுப்பாங்க
காரிய மாகணுன்னு கையெப் புடிப்பாங்க
காரிய மானபின்னெ களுத்தெப் புடிப்பாங்க

தேளுக்கு வாலில்விஷம் தில்லுமுல்லுக் கம்மூனி
ஆளுக்கு நெஞ்சில்விஷ மத்தோடு வாயில் விஷம்
பாம்புக்குப் பல்லில் விஷம் பாவிமகன் கம்மூனி
வீம்புக் குடம்பெல்லாம் விஷம விஷமாச்சே
குல்லாவெப் போட்டுமண்ணெக் கொளச்சி நாமம் வெப்பாங்க
அல்லாரு மொண்ணொன்னெ யடிமெப்பண்ணெ வெப்பாங்க
அவன் தட்டுக் கேத்தபடி யானந்தக் கூத்தடிச்சா
அவன் தலைவன் ருஸ்யாவி லுச்சிமொறெ வந்துவிட்டா
என்ன நடக்குமின்னு என்னத்தெச் சொல்லுவது ?
நன்னயமெல் லாந்தீந்த நாச வளி நடக்கும்
போட்டியிடும் பணக்காரர் போயொளியச் சர்க்காரே
நாட்டிலுயர் பணக்கார நஞ்சாக மாறிடுமே
சட்டவிட்டம் போலீசுச் சதிசெய்யும் படைவீரர்
கொட்டமிட நாடெல்லாங் குடிபளிஞ்சி போயிடுமே
ஏளெமக்க ளெல்லொரு மிடுப்பொடிய வேலைசெய்யும்
ஆளடிமையாகு மவலமாப் போயிடுமே
காக்கிறோ மென்னு சொல்லிக் களுநீரெக் காட்டிவைக்கோல்
வாக்கரிசி யைப்போட்டு மாட்டெவசஞ் செய்வதுபோல்
ரெடிமேடு வீடுகட்டி ரேசங்கொடுத்து நம்மெக்
குடிகேட ராக்கி விட்டுக் கொண்டா ளடிப்பாங்க
மூக்குக் கவுறிட்டு முடுக்கியே வால்முறுக்கி
தார்க்குச்சி போட்டிறுக்கிச் சாட்டெச் சவுக்கடிச்சி
விதைகிறுக்கி மாடோட்டும் வித்தைதயினால் மக்களுடற்
சதைகிறுக்கிக் கூட்டுப்பண்ணைச் சகதிக்கே யோட்டிடுவார்
மூக்கணாங் கவுறென்ன மொடமொடக்கும் போலீசு
தார்க்குச்சி போற்சேனைத் தடியிட்டி யுங்குத்தும்
சாட்டெச் சவுக்கென்னச் சட்டமுண்டு வால்முறுக்கி
மூட்டு வெதெகிறுக்கி முடுக்குமதி காரியுண்டு
வாய்ப்பூட்டுச் சட்டமுண்டு மனப்பூட்டுத் திட்டமுண்டு
நாய்போல வேலெசெஞ்சா நப்பாசெ ரேசனுண்டு
இம்மா திரிமக்க ளெல்லோரும் வேலைசெய்யக்
கம்மூனி யதிகாரங் கம்பீர மாய்நடக்கும்
கன்னிக்குக் கற்பில்லே கடவுளுக்கு வேலையில்லே
அன்னியனுக் காளாகி யடிமெப் படவோநாம்

ஸ்டேலினே தெய்வம்

தெய்வமில்லை யென்னாலும் ஸ்டேலினே தெய்வமெனப்
பொய்க்கவிதெ பாடுதந்தப் புரடாத்தாள் ப்ராவ்டாவே
ஒருபாவெச் சோத்துக்கே ஒருசோறு பதமென்பார்
ஒருசந்திப் பாட்டுக்கு ளொருபாட்டெச் சொல்லுகிறேன்
* மாப்பெருமை ஸ்டேலினே! மக்கள் வழிகாட்டியே!
சீர்ப்படவே மானிடனெச் சிருஷ்டிசெய்த தேவனீ!
நீதான் நிலம் படெச்சாய் நிலத்தில்மக்களைப் படைச்சாய்

…னே காலவெள்ளம் நிலைச்சிளமை யாச்செய்தாய்
…தானே வசந்தத்தில் நிறையப்பூப் பூத்திடுவாய்
நீ தானே சீரெல்லாம் நீ தானே தெய்வமெல்லாம்'
தெய்வம்,பளிச்சிக்கிட்டுத் தெய்வமாம் ஸ்டேலினையே
கைகூப்பிக் காலில் உளுங் கண்ணருவி யாகிடவோ
மணியடிச் சாத்தூக்கம் மணியடிச் சாவிளிப்பு
மணியடிச் சாவேலெ மணியடிச்சாச் சோறுன்னு
மணிக்கு மணி வேலெசெஞ்சி மனுசன் மெசினுகணமா
துணிக்கும் துக்காணிக்கும் தொல்லெப்பட்டு மாளணமா

ராஜாஜி நல்லுரை

தங்கத் தமிழ்நாட்டுத் தலைமகனும் ராஜாஜி
துங்க முறுமுண்மெத் தூய்மை மொளிஞ்சிவிட்டார்
முதலெதிரிக் கம்யூனி முரடருக்குத் தானென்ன
முதல்தர மாச்சவால் மூட்டிவிட்டார் ராஜாஜி
உள்ளொன்று வச்சிப் புறமொன்று பேசாதீர்
உள்ளதைத்தான் உள்ளபடி உரைப்பீ ரெனஉரைத்தார்
குள்ளநரித் தனமாகக் கோணல்வழி போகாதீர்
வெள்ளெவெட்ட வெளிச்சத்தில் வீரங்கொள்ளச் சொல்லிவிட்டார்
ராஜாஜி சொன்னபடி ராஜ்ஜியமெல் லாங்கேட்டா
பேஜாரில்லாதபடி பெரியசுகம் வந்திடுமே

முறையீடு

தெய்வங்க ளில்லை யெனும் தீயவஞ்ச மாகாதே
தெய்வங்க ளேயெம்மெத் தினந்தோறுங் காத்திடுவீர்
தொந்திக் கணபதியே தோத்திரஞ் செய்யுகிறோம்
எந்தக் கச்சி யானாலு மிந்தக்கச்சி யாகாது
வேலோனே யிந்நாட்டின் விடுதலையெக் காத்திடுநீ
காலிக் கம்யூனிக்குக் காட்டிக் கொடுக்காதே
பாற்கட லிற்துயிலும் பரந்தாமா நீ எளுந்து
காக்கவரு வாய்மாத்தான் கணையிங்கு வாராமல்
பிறவாப் பரமசிவப் பெம்மானே யிந்நாடு
இறவாப் புகளடைய எம்பங்கில் வந்துநில்லு
வெள்ளைக் கலைமகளே விளையாடும் பொன்மகளே
தெள்ளுமறி வுஞ்செல்வச் சிறப்புகளுந் தந்திடுவீர்
மாதா பராசக்தி பாரதத்தின் மாதாவே
ஆதாரம் நீயேதா னன்றுடங் காத்தருள்வாய்

வாழ்த்து

தெய்வ மறை [illegible]
உய்யுங் [illegible]